புதுவாழ்வு

ஆசிரியர், க. அன்பழகன், M.A.



புதுவாழ்வு

[illegible]லை 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆவணி 1 | மலர் 8

ஆசிரியர் : க. அன்பழகன் எம்.ஏ.,

துணை ஆசிரியர் : கே. ஜி. இராதாமணாளன்.

உள்ளுறை

முரசம் முழங்குக !......	...	2
வீட்டுக்கொரு பிள்ளை	...	4
ஹைதராபாத் ஆபத்து	...	11
கைகளிலே தளை !	...	13
'இந்தி' பொதுமொழியாகுமா?	...	16
இந்திக் கொடுமை	...	23
தாய்மொழி வழி...... உயர்தரக் கல்வி	...	25
பொற்சிலை	...	31
பூம்புகார்	...	38
அவன் செய்த தீங்கு	...	44
உரைகள்	...	47

[illegible]0. வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை - 7.

விலை அணா 4

16—ஆகஸ்டு 1948

இந்தி எதிர்த்திட வாரீர் — நம்
இன்பத் தமிழ்தனைக் காத்திட வாரீர்

முழக்குக

★

குமரிமுதல் இமயம்வரைக் கோடியோர் கேட்கக்
கொட்டடா! தமிழ்முரசம்; இந்த நாடு
நமதென்று உணர்த்திடினும் நரிகள் கூட்டம்
நலிவுதரும் இந்திதனை நாட்டக் கண்டோம்!
எமதருமை இன்பமொழி, எகிப்து மட்டும்
இருந்தவர்கள் சுவைத்ததுண்டு என்னும் ஓசை,
அமைச்சர்கள்தம் செவிநுழைந்து அறிவில் தாக்க
அடியடா! தனிமுரசம், அதிர வெங்கும்.

மங்காத செந்தமிழ்க்கு மாசு வந்தால்,
வாழுகின்ற தமிழ்மறவர் பொறுப்பதுண்டோ!
பொங்குகின்ற செங்குருதி வெள்ளந் தாண்டிப்,
பிணமலையின் அரண்கடந்து உள்நுழைந்தால்,
தங்குகின்ற மரம்எதிர்க்கும்! நீர் எதிர்க்கும்!
தமிழ்நாட்டின் தென்றலும்செந் தணலே கக்கும்!
சிங்கங்கள் உண்டென்றச் சிறியோர் கேட்கத்
தீட்டடா! போர்முரசம்; தெழித்து நின்று

இந்தியர்க்குப் பொதுமொழிதான் இந்தி என்றால்
இருக்கட்டும்; அதுதமிழர்க் கெதற்குத் தேவை?
செந்தமிழும் ஆங்கிலமும் அவர்க்குப் போதும்
தேயமெங்கும் சுற்றிவர, உலகை ஆள!

முரசம்!

இந்தியரைக் கேட்கின்றோம் இமயந் தாண்டி
ஏகுவிரோ? துணை இந்தி ஒன்றே கொண்டு;
ந்தமொழி உலகமொழி அதுவே வேண்டும்
எங்கள் மொழியுடன் பயில்வோம் எனமுழக்கு!

அன்றொருநாள் தமிழ்நாட்டில் தலையை நீட்டி
அடிவாங்கி அலறியதோர் கொடுநோய் இன்று,
ன்னுணர்வில் வீடணர்கள் தயவால் மெள்ளத்
தலைஎடுக்கும் கொடியநிலை தாங்கப் போமோ!
ஒன்றல்ல! இரண்டல்ல! ஓங்கும் கோடி
உயிர்கொடுக்கும் தமிழ்இளைஞர் வாழுகின்றார்!
ன்றனைய தலைவர் தளபதிகள் உண்டு;
கொலைமுரசம் முழக்கடா! கொதித்து நின்று!

ங்கெங்கு நோக்கிடினும் தமிழர் கூட்டம்
எரிபறக்க நிற்குதடா! ஏவல் நோக்கி;
ங்கமது செந்தமிழ்க்கு நேர்ந்ததென்றால்
பச்சைரத்தம் பரிமாறத் தயங்கோம்! இன்றும்
ங்கையறியும்! இமயக் கல்லும் கூறும்
கனகவிசயர் அறிவர் தமிழர் ஆற்றல்!
ங்குகின்ற தமிழமைச்சர் அறியும் வண்ணம்
ாக்கடா! எதிர்முரசம்; தகிம்த தீம்தீம்!

இரா. குழூஉத்தலைவன்.

புதுவாழ்வு

வீட்டுக்கொரு பிள்ளை

இந்தியை இந்நாட்டு இளைஞர்கட்குக் கட்டாயப் படுத்தி நம்மையும் அறப்போர் தொடுக்கும்படிக் கட்டாயப் படுத்திவிட்டனர் ஆளவந்தார்.

தமிழகத்தின் தனிப் பெருந் தலைவர்களும், அறிஞர்களும், வாலிபர்களும், மாணவர்களும் இந்தி எதிர்ப்பு மாநாடுகளிலே கூறிய விளக்கங்கள் பயன்படவில்லை. பல கட்சித் தோழர்கள் கூட்டு முன்னணியில் நின்று கூறியதன் ஆழ்ந்த கருத்தையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஒன்றுபட்ட தமிழர்களின் வேண்டுகோள் வீணாயிற்று.

திராவிடக் கழகமோ 'அறப்போர்' தொடுத்துவிட்டது தமிழர்கள் சார்பிலே. ஆயிரமாயிரம் வீர இளைஞர்கள் ஒப்பற்ற தலைவர் பெரியார் அவர்களின் கட்டளையைத் தலைமேல் தாங்கி, அறிஞர் அண்ணாத்துரை அவர்களையே முதல் சர்வாதிகாரியாகக் கொண்டுள்ளோம் என்ற குதூகலத்துடன் அறப்போரில் ஈடுபட முன்வந்துள்ளனர். தமிழ் நாட்டாரைத் தட்டியெழுப்பி இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே! என்று தமது குயிலைக் கூவச்செய்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

தமிழரசுக் கழகத்தின் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும் தன் கட்சியின் சார்பில் விரைவில் இந்தி எதிர்ப்பு மறியல் நடத்தப் போவதாகத் தெரிவித்துவிட்டார். மற்றும் சில காங்கிரஸ் தோழர்களும் கட்சிச் சார்பற்றவர்களும் இந்தப் போரிலேனும் தமிழுக்குத் தமது பங்கைச் செய்துவிடத் தீர்மானித்துள்ளனர். அறப்போர் மிகுந்த உணர்ச்சியோடும், ஒப்பற்ற உறுதியோடும், அமைதியான முறையில், நாளுக்கு நாள் வளர்ந்துவரும் பொதுமக்கள் ஆதரவுடன் நடைபெற்றுவருகிறது.

பலாத்காரத்தின் நாற்றமே வீசாத வகையில், சிறுசச்சரவுகள் கூட ஏற்படாமல், சூடான வார்த்தைகளுக்குக் கூட இடமில்லாமல் — அன்பு வழியில் நடைபெறும் இவ் வறப்போர் தமிழகத்தின் பெருமையை வடநாட்டிற்குப் உணர்த்தக் கூடியதாய் உத்தமர் காந்தியார் நிறைவேற்ற விரும்பிய 'அன்பு

'வழியைப்' பெரியார் இராமசாமி நிறைவேற்றியே தீருவார் என்று எண்ணச் செய்வதாய் நடத்தப்பட்டு வருகிறது.

ஆனால் அமைச்சர்களோ, கச்சையை வரிந்து கட்டுகிறார்கள். பத்திரிகாசிரியர்களோ உறுமுகிறார்கள். இவ்வறப் போர் தவறானது என்று மந்திரிகள் கூறும் எதையும் வெளியிடும் தினசரிகள் யாவும், அறப்போரின் அவசியத்தை விளக்கி நமது தலைவர்கள் விரிவாகப் பேசுவதை ஐந்தாறு வரி அளவே வெளியிடுகின்றன; இல்லையானால் மறைத்தே விடுகின்றன, அவர்களது தேசியத் தர்மப்படி. இந்நிலையில் பொதுமக்கள் உண்மைகளை உணருவதுதான் எப்படியோ?

முதலமைச்சர் இராமசாமியாரோ, தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "பொது நன்மையைக் கருதி, பொதுமக்கள் சர்க்கார் ஒன்றைக் கட்டாயமாகப் புகுத்தினாலும் யாரும் எதிர்க்கக் கூடாது என்று நான் முதலில் கூற விரும்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார். நூற்றுக்குப் பதினைந்து பேர்களுக்குமட்டுமே வாக்குரிமையுள்ள நிலையில், அதிலும் பலர் பொது அறிவு பெறாத நிலையில் அவர்களுள் பெரும்பான்மையோர் வாக்கைப் பெற்றுவிட்ட காரணத்தாலேயே இவர்கள் எப்படிப் பொதுமக்கள் சர்க்காராவார்கள்? அப்படியே ஒப்பினும், இவர்களுக்கு ஒன்றைக் கட்டாயப் படுத்த உரிமை இருக்குமானால், கட்டாயப் படுத்தவேண்டாம் என்று எதிர்க்கக்கூட வாக்களித்த மக்களுக்கு உரிமை இல்லாமற் போய்விட்டதா? அல்லது வாக்களித்தபோது பெற்றிருந்த அறிவைக்கூட இப்பொழுது இழந்திருப்பார்கள் என்றெண்ணுகிறதா அரசாங்கம்? மற்றும் அவர்களுக்குப் பொது நன்மையென்று படுவதே பிறருக்குப் பொதுத் தீமை என்று தெளிவாகப் படுமானால், அதை எதிர்ப்பதைத் தவிர்த்து அவர்கள் செய்யவேண்டிய செய்யக்கூடிய கடமைதான் வேறென்ன இருக்கிறது?

"தென்னாட்டு மக்கள் குறைந்த ஓர் அளவிற்கேனும், இந்தியாவின் பொது மொழியைத் தெரிந்து கொள்ளாவிட்டால் இந்திய யூனியன் நிர்வாகத்தில் அவர்களுக்குரிய பங்கை அவர்கள் பெறமுடியாது என்பதும்" அவரது பயங்காட்டும் அறிவுரையாகும். இந்திய யூனியன் ஒரு சந்தைக் கடை என்று எண்ணுகிறார் போலும் ஓமாந்தூரார், மொழி தெரிந்துவிட்டால் மட்டும் பங்கு பெற. இந்திய யூனியன் ஒரு சட்டசபை, அல்லது ஒரு அரசியலமைப்பு என்று கொண்டால், அதில் இடம் பெறக்கூடியவர்களின் குறைந்த அளவுத் தகுதி என்ன என்பது தெரியாமற் போகாது. ஏறத்தாழ கல்லூரியை எட்டிப்பார்க்க முடியாத யாரும்—யூனியன் அரசாங்கத்தில் எந்தவிதப் பங்கையும் பெறவியலாது. மற்றவர்கள் பெறக்கூடிய பங்கெல்லாம் நமக்கு ஏற்படும் இழப்பாகுமே தவிர இலாபமாகாது. இந்நிலையில் — கல்லூரி மாணவர்கள் மட்டுமே

படித்தால் சிறிது பயன்தரக் கூடிய இந்தியைப் பத்துவயது முதல் பதின்மூன்று வயதுவரை உள்ள இளம் பிள்ளைகளுக்கு, கட்டாயப் பாடமாக்கி இருப்பது ஏன்?

மேலும், தனித்து வாழக் கூடிய, இணைந்துள்ளதால் இழப்புக்கும் தொல்லைக்கு மாளாகிவரும் தென்னாட்டை, வடநாட்டார் ஆதிக்கத்திற்கு ஆளாக விட்டுவிட்டு, யூனியன் நிர்வாகத்தில் பங்குபெற இந்தி படிக்கவேண்டுமென்பது வீட்டிற்குள் வேறொருவரை விட்டுவிட்டு, உள்ளேபோக அநுமதி கேட்பதுபோலவும், தும்பை விட்டு வாலைப்பிடிப்பது போலவும், ஆசை வளர்ந்ததால் சாமியார் வேடம் போட்டவனுக்கு விருந்தளித்து மிகுதி எச்சிலை உண்பது போலவுமே தோன்றுகிறது.

"ஹிந்தி அல்லது வேறு பாஷை படிப்பது, ஒரு மாணவனின் தாய்பாஷைப் பாண்டித்தியத்தைக் கெடுக்காது என்பதையும் சர்க்கார் நன்குதெரிந்திருக்கின்றனர்" என்பதும் அவர் கூற்று.

தாய் மொழிப் பயிற்சியில் 'பாண்டித்தியம்' பெறுவதை அன்னிய மொழிப் பயிற்சி கெடுக்காது என்றால் 'ஆங்கிலம்' பயின்றபோதுமட்டும் ஏன் அவ்வளவு வெறுப்பு வளர்க்கப்பட்டது? ஆங்கிலத்தில் அதிகப் பயிற்சிபெற்ற பலர், தாய் மொழியில் பேசுவதற்கும் தடுமாற்றமடையக் காரணமென்ன? எந்த வயதும் தகுதியும் உள்ளவர்கள், அன்னிய மொழி பயின்றால் ஆபத்தில்லை என்பதையாவது எண்ணிப் பார்க்கவேண்டாமா? 10 வயதிலிருந்து 13 வயதுள்ளவர்கள் வரை—அன்னிய மொழி பயின்றால், தாய்மொழி அறிவு எப்படிச் சிதையாமலிருக்கும்? அரசாங்கந்தான் 'ஓமாந்தூரராகவே இருக்கிறதே! அவர் படித்தபோது இந்தத் தொல்லையேது, கூறினும் விளங்க. மற்றும் இந்த இளம் வயதில் படிக்கும் புதுமொழி—தொடர்ந்து பயில நேர்ந்தால் ஒழிய—ஓராண்டு இடைவிட்டால் மறந்து ஒழிந்துவிடும் தன்மையது. இதை இளம் பிள்ளைகள் பயின்றிருந்தாலும், அவர்களிலே வயது வந்த ஓரிருவர் வடநாடு செல்ல நேர்ந்தால், அப்பொழுதும் புதிதாகத்தான் பயின்றாக வேண்டும். எனவேதான், இளைஞர்க்குக் கட்டாயமாக இந்தப் பயனற்ற இந்தி வேண்டாமென்கிறோம்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரோ, இந்தச் சின்ன விஷயத்தைப் பற்றி—தமது பெரிய தலையினின்று, கருத்துக்களை வீசத் தொடங்கி விட்டார்.

"தமிழ்நாடு, மொழி மீதுள்ள ஆர்வத்தில் நாம் அவசரப்பட்டு எவ்வித முடிவையும் செய்துவிடக்கூடாது" என்று எச்சரிக்கிறார் அவர். பத்து ஆண்டுகட்கு முன்பே—கட்டாய இந்தியை எதிர்த்துப் போர் நடத்தியிருக்கும் நம்மைக் கருதி இது கூறப்பட்டிருந்தால், இத்தனை ஆண்டுக

ளாக முடிவுக்கு வராத இவர்களின் மூளைத் திறனைப்பற்றி நாம் என்னவென்று எண்ணுவது? மற்றும் இந்துஸ்தானி, இந்தி மீதுள்ள ஆர்வம் என்ற திரை மறைவில், பதவி மீதுள்ள பற்றால் எவரும் எவ்வித முடிவையும் செய்துவிடலாம் என்று கருதுகிறார் போலும் இவர்.

“நாடு பல கூறுகளாகப் பிரிந்தால், நாம் யாருக்கேனும் அடிமையாக இருக்கவேண்டித் தான் வரும்” என்று வேறு பயங்காட்டுகிறார். மிகச் சிறிய நாடுகள் பல தனித்திருப்பதையும், நல்வாழ்வு வாழ்வதையும், பெரிய நாடுகள் சிலவற்றைக் கூட அடக்கி ஆண்டுவந்ததையும் பற்றி அவர் அறியார் போலும். காங்கிரஸ் மேலிடத்தின் ஆதிக்கத்திற்கு அடங்கியே இருந்து பழகி விட்டதால் ‘உரிமையில்’ நம்பிக்கை தோன்றவில்லையோ, என்று நாம் ஐயுறுகிறோம்.

மற்றும் இன்றுள்ள அடிமைத் தன்மையை மறந்து “டில்லியில் உட்கார்ந்துகொண்டு, நம் விஷயத்தில் அவர்கள் தலையிடுவார்கள் என்று பயப்படுவதால் இப்படிப் பேசுகிறார்கள்” என்று கூறுவது வெட்கக் கேடாகும். இன்றும் அவர்கள் தலையீடு இல்லாமல் எது நடக்கிறது? காமராசர்களை அந்த இடத்தில் வைக்கவும் எடுக்கவும் அவர்களால் முடியுமே! ஜமீன், இனாம் ஒழிப்பை இஷ்டப்படியெல்லாம் மாற்றச் செய்யமுடிகிறதே! இன்னும் எது எதில் அவர்கள் தலையிட வேண்டும்? மற்றும் ‘டில்லி’ ஆட்சியை ஒத்துக்கொண்டால், அவர்கள் தலையிடாமல் என்ன செய்வார்கள்? தலையிடுவது தான் எப்படித் தவறாகும்? தலையிடுவதைத்தான் எப்படித் தடுக்கமுடியும்? அவர்களின் நாய்கூட நம் சோற்றிலே வாய் வைக்கலாம்; தடுக்க முடியாது.

தலையிடுவார்கள் என்று பயப்படுவதும் நாமல்ல. தலையிடுகிறார்கள், அது கூடாது, தென்னாடு தனியாட்சி பெற வேண்டும் என்று துணிவோடு கூறுகிறோம். அவருக்குவேண்டுமானால் அந்தப் பயம் இருக்கக் கூடும்; அதனால்தான் தன் பயத்தை மறைக்கப் “பயப்படுவது தமிழர்கள் சுபாவமல்ல” என்று தனக்குத் தானே தேர்வு செய்துகொள்ளுகிறார், தமிழர்கள் ஒற்றுமை வலிவால் ஒரு முறை ஆச்சாரியாரைத் தோல்வியுறச் செய்யும் வாய்ப்பிருந்தும், அதன் பின் அவருக்கே அடிபணிந்த காமராசர் தமிழர்கள், அஞ்சவேண்டியவற்றிற்கும் அஞ்சாத, ஆகஸ்டு ராஜர்கள் அல்ல என்பதையும் அவர் உணரவேண்டும்.

“ஹிந்தி கட்டாயப் பாடமில்லை என்று கூறும் கல்வி அமைச்சருக்கும், ஹிந்தி வேண்டாம் என்று கூறுபவர்களுக்கும் அதிக வித்தியாசமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை” என்பதும் அவர் கூற்று. அப்படியானால் கட்டாயப் பாடமில்லை என்ற அமைச்சர் பேச்சுக்கும், கட்டாயப்படுத்தியிருக்கும் செயலுக்குமிடையே உள்ள வேறுபாடு இவருக்கு

எப்படி விளங்கப்போகிறது? இவர் போன்ருருக்கு விளங்கிடும் என்று எண்ணியிருந்தால் தான் அமைச்சரே இப்படித் திட்ட மிட்டிருக்கமாட்டாரே.

இங்கிலேயில் 'இப்படி அதிக வித்தியாசமில்லாத விஷயத்திற்காக ஏன் ஒரு பெரிய கிளர்ச்சியை நடத்த முன்வருகிருர்கள்'' என்று வேறு கேட்கிருர். இந்த விஷயம் அதிக வித்தியாச மில்லாதது என்பது உண்மையாளுல், இந்த உபதேசத்தை எதிர்க்கட்சியினராகிய நமக்குக் கூறுவதைவிட, அவரது உதவியினுலேயே அமைச்சர் பீடங்களில் அமர்ந்துள்ள அவரது சகாக்களுக்குக் கூறலாமே; கூறி மாற்றலாமே. அதிலும், நாம் ஒரு பெரிய கிளர்ச்சியையே நடத்துவோம் என்பதறிந்த காமராசர் இதைத் தம் நண்பர்களுக்குக் கூருமல் இருப்பாரா? இருக்கலாமா? சொல்லியும் கேட்கவில்லேயா? அவருடைய வார்த்தைக்கு அங்கேயே மதிப்பில்லாமற போய்விட்டதா? ஆயின் எதிர்க்கட்சியில் தான் எப்படி மதிப்பார்கள்? வேறு எவர்தான் மதிப்பார்கள் என்றெண்ணி இவரும் பேசுகிருர்? இவரையும் பேச அழைக்கிருர்களே சிலர்!

இந்தியை எதிர்த்து மறியல் செய்ய உரிமை உண்டென்ருல், முஸ்லிம்களும் பிராமணர்களுங்கூட, நியாயமான தங்கள் குறைக்காக மறியல் செய்யத் தொடங்கலாமே என்று கேட்கிருர் காமராசர். இந்ததத் தந்திரம் விலே போக இவர் ஆச்சாரியாருமல்ல, நாம் காமராசருமல்ல. அவர்களுடைய குறையும் நியாயமானதென்ருல்?— அவர்களும் மறியல் செய்யட்டுமே என்றே நாம் கூறுவோம். அல்லது அரசாங்கந்தான் நியாயமான குறைகளைத் தீர்க்காமல் வேறு எதற்காக இருக்கிறது என்று கேட்கிருேம். காமராசர் பேசுவதைப் பார்த்தால், அவரே இந்த அமைச்சர் குழு பிடிக்காமல் வேறு சிலரையும் மறியல் செய்ய அழைப்பது போலல்லவோ தோன்றுகிறது.

உண்மையில், மற்றவர்கள் உரிமையைக் கேட்கப் போகிருர்கள் என்பதற்காகத் தமிழர்கள் தங்கள் உரிமைகளை இழக்க ஒரு நாளும் ஒப்பமாட்டார்கள். அவர்கள் தொடுத்துள்ள 'அறப்போரில்' என்றேனும் ஒருநாள் வெற்றி பெற்றே தீருவார்கள் என்பதைக் காமராசர்கள் உணர வேண்டும்.

''டில்லியிலே ஏராளமான தமிழ் மக்கள் இருக்கிருர்கள். அவர்கள் நன்கு இந்தி பேசுகிருர்கள்; ஆனல் அவர்களிடையே தமிழ் அழிந்துவிடவில்லே'' என்பது அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் ஆராய்ச்சி வாதம். அவர்களிடம் தமிழ் அழியாமல் இருப்பதனுல் இங்கேயும் ஹிந்தி வந்தால் தமிழ் அழியாது என்பதே அவர் கருத்து. அங்கே உள்ள தமிழரின் தாய்மொழியில் இந்தி கலப்பதைக் கண்டாலும் அதன் விளேவை இவர் எங்கே சிந்தித்திருக்க போகிருர். இவருக்குத் தான் தமி

மூக்கும் சமஸ்கிருதத்துக்குமே வேறுபாடு தெரியாதே! இந்தியாவில் உள்ள வெவ்வேறு கலாச்சாரங்களைப் பற்றி உலகறிந்த அறிஞர்கள் ஆராய்ச்சிகள் நடத்திவரும் இக்காலத்திலேயே—இந்தியா முழுவதும் ஒரே கலாச்சாரந்தான் உள்ளது என்று மனமறிந்த "உண்மையை", தமது ஆராய்ச்சியின் விளைவாக வெளியிடடவராயிற்றே! இவருடைய கருத்துப்படி நாம் சமஸ்கிருதத்தையுமல்லவா படிக்கவேண்டும்? அதை விட்டு 'இந்தி' கூடாதென்பதா? யார் யார் தயவு எவ்வப்பொழுது தேவை என்று தோன்றுகிறதோ, அவ்வப்பொழுது அவரவர் ஆசையைப்பெறும் வழியில் நடந்து கொள்ளும் சிறு பையனைப் போலவே நடந்துவரும் பெரிய மனிதர்களுக்குச் சிந்திக்கத் தெரிந்திருந்துதான் என்ன பயன்? சிந்தித்ததை வெளியே சொல்லி விட அவர்கள் என்ன சின்னக் குழந்தைகளா?

அவர்கள் நன்கு இந்தி பேசுகிறார்களாம். ஆம்! இங்கு கனம்களாக உள்ளவர்களைவிட அவர்கள் நன்குதான் பேசுவார்கள். ஆனால் அவர்களெல்லாம் படித்த காலத்தில் எந்தப் பள்ளிக்கூடத்தில் இந்தியையும் கட்டாயப்படுத்தினார்கள்? டில்லி போன பின்போ, போகத் தேவைப்படும் முன்போதானே அவர்கள் இந்தி பயின்றார்கள்? அப்படி இருக்க, இப்பொழுது மட்டும் பள்ளிக்கூடங்களில், இரண்டாவது மொழிகளுள் ஒன்று என்ற பெயரால் இந்தியைக் கட்டாயப் படுத்துவானேன்?

அமைச்சர் கோபால் ரெட்டியார் அவர்களோ, "ஒருசிலரே இப்படிக் கிளர்ச்சி செய்கின்றனர். இவர்கள் காலத்துக்கேற்ப நடக்கவில்லை. அவர்களுக்குத் தேசியம் என்பது தேவையானதல்ல." என்று பேசி இருக்கிறார்.

உண்மைதான், வடநாட்டார் ஆதிக்கத்தை வளர்க்கும் தேசியம் எங்களுக்குத் தேவையானதல்லதான். அதை உண்மைத் தேசியம் என்று கூட நாங்கள் கருதவில்லையே. காலத்திற்கேற்ப நடக்கத் தெரிந்திருந்தால தான்—நாங்கள் இன்று மந்திரிகளாகி இருப்போமே; பதவிப் பித்து இருந்தாலன்றோ நாங்கள் காலத்திற்கேற்பத் தாளம் போடுவோர்களாவோம். ஒரு சிலரே கிளர்ச்சி செய்கிறார்கள் என்பதால் கிளர்ச்சி நியாயமற்றதாகி விடாது நாளடைவில் சிலர், பலராவர், பலர் பெரும்பான்மையோருமாவார் என்பதையும் கனம் கோபால் ரெட்டியார் அவ்வளவு விரைவில் மறந்து விடுவது கூடாது.

சென்னை மாகாணத்தில், தமிழ் நாட்டில் மட்டும் இந்தி கட்டாயமில்லை என்று முதலில் தெரிவித்த கல்வி அமைச்சர், அடுத்த சில நாட்களுள்-தமிழ் நாட்டிலும் கட்டாயப் படுத்தி விட்டதாகத் தெரிவித்து விட்டு, அதன் பின்னும்-ஹிந்தி கட்டாயமில்லை, இரண்டாவது மொழிதான் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என்றும்,

இந்தி பள்ளிக்கூடந்தோறும் அவசியம் கற்பிக்கப்பட வேண்டியதாகும் என்றும், முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவதையும், சொல்லொன்று செயலொன்றாக அமைவதையும், பொதுமக்கள் புரிந்துகொள்ளக் கூடாது என்ற எண்ணத்தோடு, தனது தவறான விளக்கத்தை, நாளுக்கொரு தடவை அறிக்கையாக வெளியிடுவது தமிழ் மக்கள் நாணித் தலை குனியக் காரணமாகிறது.

இந்தியை நடைமுறையில் கட்டாயமாக்கி, பேச்சினிலே கட்டாயமில்லை என்று அவிநாசியார் பேசிய போதிலும், முதலமைச்சர் அறிக்கையிலிருந்தும், மராமத்து அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் "குறிப்பிட்ட அளவு கட்டாயப்படுத்துவது அவசியமாகிறது". என்று பேசி இருப்பதிலிருந்தும் இந்தி கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது என்பதை அமைச்சர்களே ஒப்புக்கொள்ளுகின்றனர் என்பதும், வெளிப்படையாகச் சொல்லத் துணிவில்லாமல், மறைக்கின்றனர் என்பதும் தெளிவாகின்றன.

இந்நிலையில் அறப்போர் தொடுப்பதைத் தவிர்த்துவேறு வழியில்லாததாலேயே, அறப்போர் தொடுக்கப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர்த்துப்—பிறமொழி எதையும் பயில வேண்டிய அவசியம் ஏற்படாமற் செய்தாலொழிய போர் தொடரும் நாளும் வளரும் என்பதில் ஐயமில்லை. "பாரததேவியின்" பதைப்போ, 'தினசரியின்' பிதற்றலோ, "எக்ஸ்பிரசின்" புகைச்சலோ, "இந்துவின்" தந்திரமோ, "மித்திரனின்" மறைப்புச் சக்தியோ, "தினமணியின்" புளுகுகளோ—நமது அறப்போரைத் தடுத்து விட முடியாது. காங்கிரஸ் தொண்டர்களின் பிரச்சாரமோ, தலைவர்களின் தந்திர உரைகளோ, சர்நார் - வேதரத்தினத்தின் உருட்டல் மிரட்டல்களோ, இந்தக் காலத்திலும் தமிழர்களை ஏமாற்றக்கூடும் என்று எதிர்பார்ப்பவர்கள் ஏமாளிகளேயாவர். எனவேதான்—நமது போர்—அறப்போர்—கட்டாய இந்தியை வெட்டி வீழ்த்தும் போர்—வடநாட்டார் ஆதிக்கத்தை ஒழிக்க உறுதுணையாகும் போர்—வெற்றி பெற்றே தீரும் என்ற உறுதி நமக்கிருக்கிறது.

எனவேதான் இந்த அறப்போரில் ஈடுபட, தமிழர் தளபதி, முதல் சர்வாதிகாரி, அறிஞர் ஏறு அண்ணாதுரை அவர்கள் கேட்பது போல்—நாட்டுமொழியைக் காக்க, வீட்டுக்கொரு பிள்ளை அனுப்பித் தர வேண்டுமென, தமிழ்நாட்டுத் தாய்மார்களைத் தந்தைமார்களை நாமும் வேண்டிக் கொள்கிறோம்.

வீட்டுக்கொருபிள்ளை விரைந்தனுப்புங்கள்! நாட்டுக்குரிய நம் தமிழைக் காத்திட, தமிழர்கள் வாழ்வுக்கு வழிகாண, தமிழகத்தின் விடுதலைக்கு வழி தேட, நாட்டுக்கான நற்பணியாற்ற வீட்டுக்கொரு பிள்ளை விரைந்தனுப்புங்கள். வாழ்க தமிழ்! வீழ்க இந்தி!!

ஹைதராபாத் ஆபத்து

ஹைதராபாத், காரணமாக ஏற்பட்டுள்ள நிலை பொதுமக்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டது. இந்திய யூனியன் எல்லைக்குள் அமைந்துள்ள இச்சமஸ்தானம்—யூனியனோடு இணையாததைக் குறித்து கவலைப்படாத நாமும்—யூனியனில் வாழும் மக்களுக்கு அதனால் ஏற்படும் தொல்லைகளையும், கஷ்ட நஷ்டங்களையும் இனியும் பொறுத்துக்கொண்டிருக்க வியலாது.

ஹைதராபாத் பொதுமக்கள் விரும்பும் பொறுப்பாட்சி ஏற்படாத வரையில் நைசாமின் தனியாட்சி நீடிக்கும்வரையில், அங்கே, பலமான ஆதிக்கம் பெற்றுள்ள ரசாக்கர்களின் கூட்டம், படைபடையாகப் புறப்பட்டுச் சமஸ்தானப் பொது மக்களையும் எல்லைப் பகுதியில் உள்ள யூனியன் மக்களையும், கொள்ளையடிப்பதும், கொலை செய்வதும், சூறையாடுவதும் தீமூட்டுவதும் கற்பழிப்பதும் கடத்திச் செல்வதும் ஆகிய கொடுமைகள் இழைப்பதைத் தடுத்து நிறுத்த முடியாது

பொதுமக்களின் பொறுப்பாட்சிக்கு இணங்க மறுத்து, குண்டர்களின் காலித் தனத்திற்கு இடமளித்துள்ள, நைசாம் ஆட்சியை சமஸ்தான மக்கள் தாங்களாகவே மாற்றியமைப்பதும் இயலாத செயலேயாகும். மாற்றியமைக்காத வரையில், இந்திய யூனியன் மக்களுக்கும் அது தொல்லையாகத்தானிருக்கும்.

எனவேதான், சமஸ்தானங்களின் தனி வாழ்க்கையில் அங்குள்ள மக்களுக்கே அதைத் தம் விருப்பப்படி நிர்வகிக்கும் உரிமை இருக்கவேண்டுமேயன்றி, வெளியார் தலையிடக்கூடாது என்று கருதும் நாமும் ஹைதராபாத்தைப் பொருத்த வரையில் இந்திய யூனியன் உடனடி இராணுவ நடவடிக்கை எடுத்துக்கொள்ள நேரிடும் என்று பண்டித ஜவகர், சென்னையில் குறிப்பிட்டதையும், உள்நாட்டு மந்திரி பட்டேல் ஹைதராபாத் குறித்து வெளியிட்ட வெள்ளை அறிக்கையையும் வரவேற்கிறோம்.

ஹைதராபாத் காலிகள் செய்யும் அட்டூழியத்தை—முஸ்லீம்கள் இந்துக்களுக்குச் செய்யும் கொடுமையென்றோ, இந்திய யூனியன் தொடுக்கும் போரை, முஸ்லீம் நாட்டின் மீது தொடுக்கும் போரென்றோ தவறாகக்கொண்டு சென்னை மாகா

ணத்தில் உள்ள ஒற்றுமையைக் குலைத்துவிடக் கூடாதென எச்சரிக்கிறோம். உண்மையில் படைக்கலப் பயிற்சியுடன் படைபோல திரண்டுள்ள ஹைதராபாத் காசிம் ரஸ்வியினுடைய கொள்ளைக் கூட்டத்தார், பொறுப்பாட்சி கேட்கும் பொதுமக்களைக் கொடுமைப்படுத்துவதைத் தடுக்கவும் பொதுமக்கள் உரிமை பெற உதவவும், உள்நாட்டிலேயே ஆபத்து வளராமல் தடுக்கவுமே, இந்திய யூனியன் இதில் தலையிடுவது அவசியமாகிறது. இதன் காரணமாக ஒருபோரே நேர்ந்தாலும், இந்தியா நடத்தியே தீரவேண்டும். ரஸ்வியின் படைகள், சென்னை மாகாணத்தில் நுழைந்தது என்பதைவிட, யூனியன் படைகள் ஹைதராபாத்தில் நுழைந்தது என்ற செய்தியே இருபகுதியிலுமுள்ள பொதுமக்கள் மனதில் நம்பிக்கை யூட்டுவதாகும்.

எனவேதான் திராவிடக்கழகத்தார் தமிழ் மொழியைக் காக்க, இளம் பிள்ளைகளுக்கு இந்தியைக் கட்டாயமாக்கியிருப்பதை எதிர்த்து, சென்னையில் பள்ளிமுன் மறியல் தொடங்கியுள்ள போதிலும், ஹைதராபாத் போக்கு ஒரு போர் நிலையை ஏற்படுத்துமானால், அந்தப் போரில் இந்திய யூனியனுக்கு இடையூறு ஏற்படாமலிருக்க—'அறப்போரை' அவசியமான காலம் வரை நிறுத்தி வைப்பார்களெனவும், யூனியன் சர்க்காருக்கு எல்லாவித உதவிகளும் செய்ய முன்வருவார்களெனவும், கழகத் தலைவர் பெரியார் இராமசாமி தெளிவாகத் தெரிவித்துள்ளார். மேலும் 2-8-48-ல் சென்னையில் நடைபெற்ற திராவிடக்கழக நிர்வாகக்குழுவினர் கூட்டத்திலும் 'ஹைதராபாத் மக்கள் நடத்திவரும் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை ஆதரிப்பதுடன், அதற்கு விரோதமாக அங்கு நடத்தப்படும் அடக்கு முறையையும் ரசாக்கர்களின் அக்கிரமச் செய்கைகளையும் இக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது" என்றொரு முக்கிய தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

மற்றும், இந்த இராணுவ நடவடிக்கை மிக விரைவில் வெற்றி பெறவேண்டுமானால், நம் நாட்டிலேயே, அவர்களுக்கு ஐந்தாம்படை வேலை செய்யும் துரோகிகளையும், ஹைதராபாத்திற்கு முக்கிய பொருள்களை அனுப்பித்தரும் கயவர்களையும் மிகக் கடுமையான தண்டனைகளுக்காளாக்க வேண்டும்.

தென்னாட்டின் ஒற்றுமைக்கு, பண்டித ஜவகரே கண்டு புகழ்ந்த அந்த அமைதிக்கு, திராவிடப் பண்பாட்டிற்கு, நம் தமிழ் நாகரிகத்துக்கு உலை வைக்கும் கொடியோர்களாகிய ரசாக்கர்களின் கொட்டம் ஒடுக்கப்பட்டு, ஹைதராபாத் ஆபத்து ஒழிந்து மிகவிரைவில் அங்கும் பொறுப்பாட்சி பூக்க வேண்டுமென விழைகிறோம்.

கைகளிலே தளை!

தன் நாட்டை இழந்து, மணிமுடியை இழந்து, மனித உரிமையைக்கூட இழந்து, அலைந்து திரிந்துகொண்டிருந்த ஓர் (மாஜி) அரசன், திடீரென ஒரு நாள் அரசனாக்கப்பட்டான். நாட்டிலே தோன்றிய விடுதலை வேட்கையும், முற்போக்குணர்ச்சியுமே, அடிமை வாழ்வை அகற்றி நாடோடியாக ஆனவனை மறுபடியும் நாடாள்வோனாக ஆக்கிற்று.

அவனோ, மன்னனான பெருங்களிப்பிலே, சில திங்கள்வரை தன்னையே மறந்திருந்தான். தான் அரசன் என்ற எண்ணம் மனதிலே பதியத் தொடங்கிற்று. அரசுரிமை மறுபடியும் போய்விட்டால் என்ன செய்வது என்ற கலக்கமும் தோன்றிற்று. அவனுக்கோ தன்னம்பிக்கை இல்லை. அவனுடைய 'வீரம்' அவனுக்குத் தெரிந்ததுதானே!

“வெளி நாட்டார் இனி வெல்ல முடியாது; தன் நாட்டவர் இனி என்றும் அடிமைகளாக வாழார்” என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், தன் நாட்டவரே தனக்கு விரோதமாகித் தன் ஆட்சி வேண்டாமென்றால், என்ன செய்வது என்று பயப்படலானான்.

“யார் அப்படிச் சொல்லக்கூடியவர்? நாட்டு மக்களின் உள்ளத்திலே இடம் பெற்றுவிட்ட தலைவன் யார்?” என்று எண்ணினான். மறுகணம் “ஆம்! அவனேதான்! யார் இந்த நாட்டினை மாற்றாரிடமிருந்து மீட்டு நம்மை இந்த மண்டலாதிபதியாக்கினானோ அவனேதான்! யார் நாட்டு மக்களின் படை திரட்டி, நாட்டைவிட்டு அன்னியனை ஓடச் செய்தானோ அவனேதான்!” என்ற முடிவுக்கு வந்துவிட்டான் அவன்.

ஏவலாளனை அழைத்து “குணதீரனை, நமது அவைக்கு வரச் சொல்” என்றான்.

வீரன் குணதீரனும் வந்தான். அவனைப்பார்த்து, “நீதானே இந்நாட்டு விடுதலைக்குக் காரணமானவன்?” என்றான் அரசன். தற்பெருமையற்ற குணதீரன் பதில் கூறவில்லை.

“உன்னோடு உடன் உழைத்த தோழர்கள் யார் யார்? என்று கேட்டான் அரசன். அவன் அந்தத் தோழர்களின் பெயரையும் தொண்டையும் கூறினான்.

மன்னனின் கவலை தீர்ந்தது. முகமலர்ச்சியோடு, குணதீரனைப் பார்த்து, இன்றுமுதல் விடுதலை வீரனாகிய நீயும், உன் தோழர்களும், நாட்டிலே நடமாடுவதை நான் விருப்பாததால், உங்களுக்குச் சிறைத்தண்டனை விதித்திருக்கிறேன். இது உங்களுடைய தாய்நாடு, வெளிநாடல்ல, ஆளும் நானும் உங்களால்

அமர்த்தப்பட்டவன், வெளியாரால் அல்ல. எனவே நீங்கள் சிறையிலே இருந்தாலும், விடுதலை பெற்ற உங்கள் நாட்டுச் சிறையிலேதான் இருப்பீர்கள், உங்கள் இலட்சியந்தான் நிறைவேறி விட்டதே! எனவேதான் சிறைத் தண்டனை விதித்திருக்கிறோம் என்று கூறிச் சென்றான் அரசன்.

விடுதலை வீரனுக்கும் பிறருக்கும், சிறைத் தண்டனை கூட அவ்வளவு கொடுமையாகத் தோன்றவில்லை. ஆனால், இப்படிப்பட்டவனையும் இந் நாட்டுக்கு மன்னனாக்கினோமே என்ற வேதனையே கொடுந் தண்டனையாயிற்று. அதுவே அவர்களுடைய உள்ளத்தையே கொல்லும் தண்டனையுமாயிற்று.

அந்த மன்னனைக் குறித்து—அந்நாட்டு மக்கள் என்ன கருதியிருப்பார்கள்? நீங்கள்தான் என்ன கூறுவீர்கள்? அன்றி எவ்வளவு காலத்துக்குத்தான் அந்தக் கோழை நாட்டாட்சி செய்திருக்கக்கூடும்?

இந்தக் காலத்தும்—இத்தகைய மனமுள்ளவர் ஆட்சிப் பீடத்தமருவது நின்றபாடில்லை.

புதுப்புது பாதுகாப்புச்சட்டங்களும், அன்றாடம் பிறக்கும் தடைகளும், நமக்கு மேலே கூறிய காட்சியையே நினைவூட்டுகின்றன.

சில திங்கட்குமுன் "போர்வாள்" என்ற நாடகத்துக்குத் தடைவிதித்தனர். அதன்பின் 'இராவணகாவியம்' என்ற இன்தமிழ்க் காப்பியத்திற்கும் தடைவிதித்தனர். இப்பொழுதோ, தமிழ்நாட்டின் தனிப்பெருங் கவிஞர், பாரதியாரின் நண்பர், பாட்டாளிகளின் தோழர், புரட்சிக்கனல், பாரதிதாசன் அவர்கள் இயற்றிய 'இரணியன்' என்ற நாடகத்தை யாரும் நடிக்கக் கூடாதெனத் தடைவிதித்துள்ளனர்.

'பிரஹலாதன்' என்ற பெயரில் குருட்டு நம்பிக்கை வளர்க்கும் நாடகம் நடைபெறலாம், அதை இன்றைய அமைச்சர்களே கண்டு பல்லிளிக்கலாம், ஆனால் மூடநம்பிக்கையைப் போக்கி அறிவூட்டும் 'இரணியன்' நடிக்கப்படக்கூடாது, அதைக்கண்டு மக்கள் தெளிவுபெறக்கூடாது. இதுவே ஆளவந்தாரின் நோக்கம்.

'இரணியன்' நாடகத்தில் இவர்கள் என்ன குற்றத்தைக் கண்டார்கள்? அப்படிப்பட்ட எந்தக் குற்றம் எந்தப் புராணக் கதையில் இல்லை? இரணியனை ஓர் இணையற்ற வீரனாகச் சித்தரித்தது வேண்டுமானால், குற்றமாகலாம் — தெளிவற்றவருக்கு. ஆனால் அறிஞர்கள் காணக்கூடிய குற்றமென்ன?

பதினான்கு ஆண்டுகளாக நாட்டிலே நடைபெற்று வந்த ஒரு நாடகத்தை, ஆச்சாரியார் மந்திரிசபையே தடைவிதிக்காத ஒரு நாடகத்தை ஓமாந்தூரார் அண்டு கம்பெனி தடைவிதித்துவிட்டது.

மாற்றாரே விட்டுவைத்திருந்த

வீரனை, தன்னை மன்னனாக்கினான் என்பதனாலேயே சிறைத்தண்டனை விதித்த அரசனைப் போல், தன்மான உணர்ச்சி யூட்டி, தமிழினப் பற்று வளர்த்து, ஆரிய ஆதிக்கத்தை வீழ்த்தி, தமிழ் நாட்டில் தமிழன் ஆட்சி ஏற்படும் சூழ்நிலையைக் தோற்றுவிக்கக் காரணமான ஓர் அரிய நாடகத்தை, புரட்சிக் கவிஞரின் சித்திரத்தைத் தடை செய்துள்ளார்கள்.

தடையினால் வெளித்தோற்றங்களைத் தடுக்கலாமே யொழிய உட்கருத்தைத் தடைசெய்ய எவராலும் இயலாது. வீரனுக்கு விலங்கிடலாம்; அது அவனுடைய கைகளைத்தான் பிணிக்கும், உள்ளத்தை யல்ல.

'இரணியனை' இனி நாடக மேடையில் தோன்ற முடியாமற் செய்யலாம். ஆனால் அவன் மக்களது மனமேடையிலே உலவத் தொடங்கி நீண்டநாளாகி விட்டது. ஆளவந்தார் அண்மையிலே, 'போர்வாளின்' பளபளப்பு கண்ணைக் கூசியது கண்டு அதைத் தடைசெய்தார்களே, அந்த வாள், 'இணையற்ற வீரன்' கையிலே காட்சியளித்ததுதான், என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதுவும் உறையிலே கிடக்கிறது, தேவையான போது வீரர் கையிலே அது காட்சியளிக்கத் தவறாது. 'இராவண காவியம்' அது 'இணையற்ற வீரனின்' வாழ்க்கை இலக்கியம். அவனது உள்ளத்துப் படப்பிடிப்பு. படத்தை மறைத்து வைத்து விடுவதாலேயே பொருள் மறைந்து விடப்போவதில்லை.

இணையற்ற வீரனோ தன் கடமையைச் செய்து விட்டான். அவன் ஊட்டிய விடுதலை உணர்ச்சி, இப்பொழுது காட்டுத் தீயாகி விட்டது. அவ்வுணர்ச்சித் தீயை மூடிவைக்கலாம், மறைக்கலாம், ஆனால் அணைக்க முடியாது என்பதை ஆளவந்தார் நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அமைச்சர்களே! நீங்கள் தடைவிதித்துக் கொண்டே போங்கள்! அவை, உங்கள் சொந்தக் கைகளிலே மாட்டிக் கொள்ளும் விலங்குகளே தவிர வேறல்ல என்பதை நாளடைவில் உணருவீர்கள்.

அந்த உணர்வு ஏற்படுவதற்கும், தங்கள் ஆட்சி சரிவதற்கும் ஏதோ தொடர்பு இருப்பதுபோல் தோன்றுகிறது. எனவே தான், பொன்னாபரணம் என்ற எண்ணத்தில், இரும்பு விலங்குகளை மாட்டிக் கொள்கிறீர்கள். நீங்களும் இந்நாட்டவராயிற்றே என்ற எண்ணத்தாலேயே கடமை உணர்வோடு எச்சரிக்க முன்வருகிறோம். வீரனுக்கு விலங்கணிவித்தீர்; அது வஞ்சகருக்கு வாழ்வளித்ததாகும். அமைச்சர்களே! ஆரியத்துக்கு அடிமையானதெல்லாம் போதும், மேலும் அடிபணியாதீர். சற்றுக் கூர்ந்து கவனியுங்கள், 'கைகளிலே தளை" இருப்பது தெரியும்.

‘இந்தி’

பொது மொழியாகுமா ?

(சர். கே. வி. ரெட்டி நாயுடு சொற்பொழிவு)

கட்டாய இந்தியைத் தமிழர்கள் மட்டுந்தானே எதிர்க்கிறார்கள் ? என்று கேட்கின்றனர் சிலர்.

பத்து ஆண்டுகட்கு முன்பே, ஆந்திரப் பிரமுகர் சர். கே. வி. ரெட்டி அவர்களும், கேரளப் பிரமுகர் சர். எம். கிருஷ்ணநாயர் அவர்களும், கட்டாய இந்தியைக் குறித்து—காஞ்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தமது தலைமையுரையிலும், திறப்புரையிலும் கூறிய அருங்கருத்துக்களை—இதன் கண்ணும் அடுத்த கட்டுரையிலும் வெளியிட்டுள்ளோம்.

தமிழர்கள் தாம் அறிவதோடு பிறமொழியினர்க்கும் எடுத்துக் கூறப்பயன்படுமெனக் கருதுகிறோம். இக்கருத்துக்களை உணரும் பெற்றி—இன்றைய ஆந்திரர்கட்கும், மலையாளிகட்கும் இருப்பின்—அவரும் இந்தி எதிர்ப்பில் பங்கு கொள்வர் என்பதில் ஐயமில்லை.

உங்களுடைய அன்பான அழைப்பை ஏற்றுக்கொள்ள முதலில் நான் தயக்க மடைந்தேன். எனினும், இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது, ஒரு மகத்தான பிரச்சினை மட்டுமல்லாமல், நமது மொழி, கலை, நாகரீகம் ஆகியவைகளைப் பாதிப்பதாக இருப்பதை உணர்ந்த பிறகு, உங்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

மேலும், என்னை இந்த மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொள்வதன் மூலம், இந்தப் பிரச்சினை தமிழர்களை பாதிக்கக்கூடியதோடு, இந்த மாகாணத்திலுள்ள நான்கு மொழிப் பிரதேசங்களையும் பாதிப்பது என்பதை அரசாள்வோர் அறியட்டும் என எண்ணுகிறீர்கள் என நம்புகிறேன்.

அது முற்றிலும் உண்மையேயாகும். இவ்விஷயத்தில் உங்களுடன் ஒத்த கருத்துடைய பல ஆந்திரர் இருக்கிறார்களென உறுதி கூறுகிறேன்.

திராவிடரத்தம் ஓடும் ஒருவனாவது, இந்த வேண்டாத இந்தி மொழியை ஏற்கனவே பாரத்தைச் சுமந்துள்ள

நமது சிறுவர்களிடமும், சாந்தத்தோடு இருக்கும் நம் வீட்டினுள்ளும் புகுத்தப்படுவதைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டான்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப் படுமானால் பிரஜா உரிமை பாதிக்கப்படுவதோடு, தமிழின் தனிப்பெருமை குன்றும், திராவிட நாகரீகம் சிதையும் மனிதனுடைய கருத்துக்களை; மொழி எவ்வளவு தூரம் உருவாக்குகிறது என்பதை இன்றைய (காங்கரஸ்) சர்க்கார் உணரவில்லை.

மக்களுடைய மொழியை ஒட்டியே மனோ வளர்ச்சி இருக்கிறது. குழந்தைகளின் கருத்து வளர்வதும், பிறகு வாழ்க்கையிலே இலட்சியங்கள் ஏற்படுவதும், மொழி, கலை ஞானம் ஆகியவைகளினாலேயேயாகும்.

காங்கரஸ் தலைவர்கள் பழைய காலத்திய கலைகளிலே பற்றுக்கொண்டவர்கள். அவர்களுடைய தேசீய வாழ்க்கைத் தத்துவங்களும், கருத்துக்களும் நம்மை துவாபர யுகத்திற்கோ, கிரேதா யுகத்திற்கோ அழைத்துப்போகக்கூடியன.

அப்படிப்பட்ட இவர்கள் அன்னிய மொழியை நம்மிடையே புகுத்துவானேன்? திராவிடர்களாகிய நமக்கு, ஆங்கிலம் எப்படி அன்னிய மொழியோ, அப்படியே ஹிந்தியும் அன்னிய மொழிதான். அதிலும், ஹிந்தி மொழி, பழய நாளைய மொழியுமல்ல, பூரண வளர்ச்சி அடைந்ததுமல்ல.

நான் ஹிந்தி மொழியைக் கற்றறிந்தேனில்லை, எனினும், எனக்குத் தெரிந்தவரை, 13-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான், ஹிந்திமொழியின் ஆதிக் கவி எனப்படும் "சண்டபார்டி" என்பவரிருந்தாரென அறிகிறேன்.

அவர் 'பிரிதிவிராஜராஸ்யூ" என்ற நூலை எழுதினார். அந்த மொழியிலே அதற்கு முன்னால், வேறெந்தக் கலையும் இருந்ததாக நாமறியோம்.

ஆனால் தமிழ், இந்தியாவின், ஆதிக்காலமொழி. தமிழ் இலக்கணமாம் 'தொல்காப்பியம்' இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது.

தமிழெங்கே? ஹிந்தி எங்கே? இரண்டிற்குமா ஒப்பிட்டுப் பார்ப்பது! தொல்காப்பியம் என்பது ஒரு இலக்கண நூல். ஒரு மொழி, நல்ல வளர்ச்சி அடைந்த பிறகுதான் அதற்கு இலக்கண நூல் தேவையாக இருக்கும்.

ஆகவே இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே தமிழ்மொழி ஒரு உன்னத வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது விளங்கும். தமிழ் மொழி பண்டைக்காலமொழி என்பதோடு, கவர்ச்சி, வனப்பு நிரம்பிய மொழி. அதன் அடிகளை நெருங்கவும் ஹிந்தியினால் முடியவே முடியாது. "கவிதை இயற்றும் வகைக்கு ஏற்றபடி மொழியை வளர்த்ததில், சமஸ்கிருதத்தைவிட தமிழே நிகரற்றது" என டாக்டர் பர்னல் கூறுகிறார்.

'திராவிட மொழிகளின் இலக்கணங்களை ஒப்பிட்டுப் பார்த்தல்" என்ற புத்தகத்தை எழுதிய ஆசிரியர்

கால்ட்வெல் "தமிழில் கலைச் சொற்களை, ஒரு கவி திடீரென இயற்றி இருக்கமுடியாது. நீண்ட நாட்களாக, அவைகள் உற்பத்தி செய்யப்பட்டு, வளர்ச்சி அடைந்திருக்கவேண்டும் என்பதைக் கவனிக்கும் போது, தமிழ், மிகப் பழங்காலத்திலிருந்தே உன்னதமாக வளர்க்கப்பட்டு உச்சநிலை அடைந்தது" எனக் கூறுகிறார்.

இத்தகைய ஆதிமொழி என ஹிந்தியைக்கூற முடியுமோ? குறள், சிலப்பதிகாரம் போன்ற ஒரு மணிக்கு ஒப்பான எந்த நூலேனும் ஹிந்தியில் காட்ட முடியுமா? ஹிந்தி, மிக நன்றாக வளர்ச்சி அடைந்த மொழி என்றுகூட வைத்துக் கொள்வோம். அதற்காக அதை நமது மாகாணத்தில் கட்டாயப்படுத்திப் புகுத்த வேண்டுமா?

முதல் மூன்று பாரங்களில் வாசிக்கும் 10, 12 வயதுள்ள மாணவர்களுக்கு, திணிக்கப்பட வேண்டுமென பிரயத்தனம் நடக்கிறது. ஏற்கனவே, இந்த மாணவர்களின் அறிவுத் திறனுக்கு அதிகமான பாடவகைகள் உள்ளன. இந்தப் புது மொழியைப் பரப்ப ஏராளமான பணச் செலவாகும், ஏராளமான உழைப்பும் தேவையாக இருக்கும். காலம், பணம் இவற்றை கட்டாய ஹிந்தித் திட்டத்திற்கு விரயமாக்காது, மாணவர்களின் நன்மைக்கேற்ற வேறு எதற்கேனும் உபயோகித்தால் மிக இலாபகரமாக இருக்கும். இந்த வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள்மீது மேலும் சுமையை ஏற்றுவது அடாது.

எந்தக்காரணத்திற்காக ஹிந்தி கற்பிக்கப்படவேண்டும்? அதனால் என்னபயன் விளையும்? மூன்று ஆண்டுகளுக்குக் கட்டாயப் படுத்தப்படுவதால், ஹிந்தியை மாணவர்கள் படிப்பதால், அவர்களுக்கு அந்த மொழி ஞானம் அப்படியே இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது?

சிறு பிராயத்தில் ஹிந்தியைப் படிப்பதால் இவர்கள் பெரியவர்களாகி, வேலை தேடிக் கொண்டு வடநாட்டிற்குச் செல்லும்போது, ஹிந்திமொழி ஞானம் உதவியாக இருக்குமெனக் கூறுவது வெறும் கோமாளிக் கூத்தாகும்.

வடநாட்டிலே படித்தவர்களிடை வேலையில்லாத் திண்டாட்டமில்லையா? முதல் மூன்று பாரங்களில் ஹிந்தியைக் கற்றுக்கொண்டதற்காக "மதராசிகளைச்" சுலபத்திலே, வடநாட்டு மாகாணங்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்ளவா போகின்றன? இவைகள் சுத்த அபத்தம், ஆகவே இவைகளைப் பொருட்படுத்துவதற்கேயில்லை.

ஹிந்தியை வைத்தே தீருவோம் என காங்கரஸ் மந்திரிகள் பிடிவாதமாக இருப்பதன் காரணந்தான் என்ன? இந்திய ஒற்றுமைக்கு ஒரு பொது மொழி அத்தியாவசியம் என அவர்கள் மனப்பூர்வமாக எண்ணியுமிருக்கலாம். அதுதான் அவர்களுடைய எண்ணம் என்பதை வேண்டுமானு

லும் ஒப்புக்கொண்டே பார்ப்போம்.

உண்மையிலேயே, ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதற்கு ஏதாவதொரு காரணத்தைக் கூறவேண்டுமானால், சமஷ்டி ஏற்பட்டு, மாகாணங்களும், சுதேச சமஸ்தானங்களும் ஒன்றாகவும், பொது மக்களிடை ஒரு ஐக்கிய உணர்ச்சி ஏற்பட்டு, யாவரும் ஒரு தேச மக்கள் என்ற உணர்ச்சிவளரவும், ஒரு பொது மொழி தேவை, என்பதைத்தான் கூறமுடியும்.

அந்த ஒரு காரணந்தான் ஏதோ, பார்வைக்காவது காரணம் போல் தோன்றக்கூடும். இவ்விதம் பார்த்தால், இது அரசியல் நோக்கத்துடன் வரும் திட்டமென ஏற்படுமே தவிர, கல்வித் துறையிலுள்ள கொள்கை, இலட்சியங்களுடன் சம்மந்தப்பட்டதல்ல என்பது விளங்கும்.

ஆனால் சமஷ்டி ஏற்படின், தேசபக்தி வளரவோ, தேசீய ஒற்றுமை பலப்படவோ, மக்கள் ஒன்று கூடவோ, ஒரு பொது மொழி அத்யாவசியந்தானா? சரித்திரம், மாறுபட்ட உண்மையே சாற்றுகிறது.

கானடாவைப் பார்ப்போம். அங்கு சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கு இப்போதும், பிரன்ச்சு, இங்லீஷ் ஆகிய இரு மொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. 1891-ம் ஆண்டு சட்டம் ஏற்பட்டதிலிருந்து, குயூபெக் சட்டசபையில், பிரன்ச்சு இங்லீஷ் ஆகிய இரு மொழிகளும், உபயோகிக்கப்படுகின்றன. இரு மொழிகளும் உபயோகிக்கப்பட வேண்டும் என்பது, அரசியல் அமைப்பில் திருத்தங்கள் ஏற்பட்டநாள் தொட்டு, நடை முறையிலே காட்டப்பட்டே வருகிறது. முதலில் பிரன்ச்சு கனடியர்களுக்குத் தங்கள் மொழிமீது இருந்த பற்றின் காரணமாக இங்கிலீஷ்தான் கனடாவில் பொதுமொழியாக இருக்க வேண்டுமென வற்புறுத்த பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கே துணிவு ஏற்படவில்லை. கனடாவின் தேசீயத்திற்கு ஒரு பொதுமொழி இருந்தே தீர வேண்டும், அதுவே இன்றியமையாதது என்றும் கருதப்படவில்லை.

தென் ஆப்பிரிக்காவை எடுத்துக் கொள்வோம். அங்கு இரு ஜாதியினர் இருக்கின்றனர். இரு மொழிகள் இருக்கின்றன. ஆங்கிலேயருக்கு இங்கிலீஷ், போயர் எனப்படும் டச்சுக்காரருக்கு டச்சு மொழி, இன்றும் இருந்துவருகின்றன.

1909-ம் வருஷத்திய தென் ஆப்பிரிக்கா சட்டத்தில், இங்கிலீஷ் டச்சு ஆகிய இரு மொழிகளும் சர்க்கார் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், இரண்டிற்கும் சம உரிமை, சம சந்தர்ப்பம், சம அந்தஸ்து, தரப்பட வேண்டுமெனவும், சட்டசபை நிகழ்ச்சிகள், குறிப்புகள் யாவும் இரு மொழிகளிலும் எழுதப்படவேண்டுமெனவும், கூறப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து தேசத்திலே மூன்றுவித ஜாதியினர் உள்ளனர். மூன்றுவித மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் தேசம் ஒன்றுதான். தேசீய ஒற்றுமையும் உள்ளது.

1874-வது ஆண்டு நிறைவேறிய, சமஷ்டி சட்டத்தின்படி ஜெர்மன், பிரன்ச்சு, இத்தாலியன், ஆகிய மூன்றும் தேசியமொழிகளாக ஏற்படுத்தப்பட்டன!

அங்கு 100-க்கு 71 பேர் ஜெர்மன் மொழியும், 23 பேர் பிரன்ச்சு மொழியும், 5 அல்லது 6 பேர், இத்தாலிய மொழியும் பேசுபவர்கள் என்ற போதிலும்கூட, மூன்று மொழிகளும், தேசிய மொழிகளாக ஏற்படுத்தப்பட்டன.

இவைகளை எல்லாம் கவனிக்கும்போது, இந்தியாவிற்கு ஒரு பொதுமொழி அவசியமில்லை என்பது நன்கு விளங்கும். பல நூற்றுக்கணக்கான மொழிகள்பரவி உள்ள மாகாணங்களிலும், சுதேச சமஸ்தானங்களிலும், ஒரு புது பொது மொழியைப் பரப்பி நிர்ப்பந்தப் படுத்துவதென்பதும் சாத்தியமான காரியமாகாது.

மொழிகளிலேயே, பல சிதைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஒன்றுக்கொன்று வித்தியாசமாகி விடுகின்றன. கோடிக் கணக்கான மக்களுள்ள, பரந்த இந்தியாவிலே இது சாதாரணமாக நிகழக்கூடியதே. நிரந்தரமான ஒரு அகில இந்தியப் பொது மொழி சொப்பன உலகில்தான் இருக்க முடியும்.

ஐரோப்பாவிலே சிறுபான்மையினரின் மொழிப்பிரச்சினை பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. ஒரே நாட்டிலே, பெரும்பான்மையினரின், மொழி, நாகரிகம் இவைகளிலே சிறுபான்மையினரைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் யாவும் அடியுடன் தோற்றன.

காங்கரஸ் தேர்தல் அறிக்கையில் இதைப்பற்றி ஒரு வார்த்தையுங் கூறப்படவில்லை. நான் படித்துப் பார்த்த அளவிலே, எந்தக் காங்கரஸ் வாதியும் தேர்தல் பிரசாரத்தின்போது, காங்கரஸ்காரர் அதிகாரத்திற்கு வந்தால் ஹிந்தியை நமது பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக்கப் போவதாகப் பேசவுமில்லை.

ஆகவே, அதிக பாதகத்தைத் தரும்படியான இந்த மாற்றத்தைக் காங்கரஸ் மந்திரிகள் பொதுஜன ஆதரவான அதிகாரத்தைப் பெருமலேயே செய்கிறார்கள். ஆதரவிற்குப் பதிலாகப் பொதுஜன எதிர்ப்புத்தான் உருவாகி இருக்கிறது. நூற்றுக்கணக்கான கூட்டங்களிலே பொதுஜனப் பிரமுகர்கள், கட்டாய ஹிந்தித்திட்டத்தை எதிர்த்தார்கள். இந்தத் திட்டத்தை சர்க்கார் சுலபத்தில் நிறைவேற்ற முடியாதெனவும், பொதுமக்கள் விருப்பத்திற்கிணங்க, காங்கரஸ் சர்க்கார் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் எனவும் கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களே ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியுள்ளார். அவர் கூறிய இந்தப் பொன்மொழியை சர்க்கார் புறக்கணித்து விட்டு, ஈவு இரக்கமின்றி, சிறுவர்களின் மீது ஹிந்திப் படிப்பைக் கட்டாயமாகத் திணிக்க விரும்புகிறது. மக்கள் இவ்வளவு எதிர்க்கும்போது ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால், அது முழுத் தோல்வியாக முடியும் என்பதுடன், ஆபத்தான நிலைமையை உண்டாக்கும் என்பதை, இந்த மந்திரிகள் உணரவில்லை.

ஹிந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்தினால் இந்த மாகாணத்திற்கு, மற்றைய மாகாணத்துடன் சம்பந்தப்படுவதால் உண்டாகும் நிலைமையை இனிக் கவனிப்போம். மத்திய சர்க்கார் (இந்திய சர்க்கார்) கல்கத்தாவில் இருந்தபோது, சர்க்கார் உத்தியோக மண்டலம் பூராவும் வங்காளிகளிடம் இருந்தது. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு சர்க்கார் தலைமை ஸ்தானத்தை டில்லிக்கு மாற்றிய பிறகு, உத்தியோக மண்டலம் பஞ்சாபிகள், ஐக்கிய மாகாண வாசிகளின் வசமாயிற்று.

ஆனால் மதராசுக்கு என்றும் போக்கிடமில்லாதிருக்கிறது. சென்னைமாகாணத்தைக் கண்டாலே வட நாட்டாருக்கு அலட்சியம்.

டில்லியிலே நமக்கு (சென்னை மாகாணத்திற்கு) செல்வாக்கே கிடையாது. நமது உணர்ச்சிகளை மதிப்பதில்லை. முன்பு வங்காளம், இப்போது பஞ்சாப், ஐக்கிய மாகாணம் ஆகியவைகள், நம்மைத் தமது அடிமைகளெனவே கருதி வருகின்றன.

ஹிந்தி மொழிக்கு விட்டுக்கொடுத்தால், வடநாட்டு மாகாணங்களுக்கு அடங்கி நடக்கும் சாதுக்கள் நாம் என்பதற்கு மற்றொரு உதாரணம் என்று தான் கருதமுடியும்.

இந்தியர்களில் பெரும்பான்மையினர், ஹிந்தி மொழி பேசுகிறார்கள் என்று கூறுவது ஆதாரமற்றது.

வங்காளிகள் ஹிந்தி மொழியைச் சட்டை செய்வதில்லை. முஸ்லீம்கள், கட்டாய ஹிந்தித் திட்டத்தை எதிர்க்கிறார்கள். அவர்கள் என்றும் விரும்புவது உருதுமொழியாகும்.

ஹிந்தி திணிக்கப்படுவதை பம்பாய் மாகாணத்திலுள்ள கன்னடமொழி பேசுபவர்களும், மாராட்டியரும், கடுமையாக எதிர்க்கிறார்கள்.

நமது பிள்ளைகளின் குரல்வளையை அழுத்தியேனும் ஹிந்தியைப் புகுத்த வேண்டுமென, காங்கிரஸ் மந்திரிகளை எது தான் தூண்டுகிறதோ?

அதிகார பீடத்திலே இடங்கிடைத்து விட்டதாலும், திட்டத்திற்கு எதிரிடையாக எதிர்ப்பு வந்தால், தங்களிடம், அடக்குமுறை ஆயுதம் இருக்கிறதென்ற நம்பிக்கையினாலுமே, நமது பள்ளிக் கூடங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கியுள்ளனர்.

காங்கிரஸ் மந்திரிகள் புதிதாகச் சம்பாதித்துக்கொண்ட அதிகார வெறிமட்டுமேயன்றி அவர்களுக்கு தேசியக் காய்ச்சல் கடுமையாக இருக்கிறது. அந்தக் காய்ச்சல் குறைந்து நிதானமானால் தான், அவர்களுக்கு உள்ளது உள்ளபடித் தெரியும். தேசியம், கலை இவைகளையே அழிக்கக் கூடிய வேலைகளிலும் அவர்கள் ஈடுபடாதிருப்பார்கள். தேசியம் நல்லதுதான்; தேசியம் அவசியந்தான்; ஆனால், அந்த தேசத்தின் ஒருபகுதியினரின் மொழி, கலை இவற்றை அழித்து, வேறு பகுதியினரின் ஆதிக்கத்தை வளர்க்க, அந்த தேசியம் உபயோகப்படுத்தப் பட்டால்,

அதனை எதிர்க்க வேண்டுவது மிகமிக அவசியமாகிறது.

ஏதோ மன எழுச்சி காரணமாக நாம் ஹிந்தியை எதிர்ப்பதாகச் சில சமயங்களில் சொல்லப்படுகிறது. ஆனால் மன எழுச்சியின் உண்மையான மதிப்பை ஏன் குறைக்கிறார்கள் என்பது தான் எனக்கு விளங்கவில்லை. சுதேச மன எழுச்சி, அல்லது இன உணர்ச்சி காரணமாகவே நாம் ஹிந்தியை எதிர்ப்பதாகக் கூறப்படுவதாயினும் சரியே இவைகளைச் சட்டை செய்யாது, காரியங்களைச் சாதித்துக் கொள்ளத் தொடங்கினால், அதிகாரத்தை அகம்பாவமாகச் செலுத்தியவர்கள் தங்கள் தவறைத் தாமாகவே உணர்ந்தனர் என்பதைச் சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது.

கட்டாய ஹிந்தித் திட்டத்தினால் மக்களிடை மனக் கொதிப்பு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. பார்க்கக் கண்களும் கேட்கச் செவிகளும் படைத்தவர்களாக நமது மந்திரிமார்கள் இருப்பின், அந்த எதிர்ப்பு எவ்வளவு பிரம்மாண்டமான உருவுடன் இருக்கிறதென்பதை அறிவர்.

அவர்கள் விவேகிகளாக இருந்தால், வங்காளத்திலே பிரிவினை காரணமாக எவ்வளவு தொந்தரவு நேரிட்டதோ அவ்வளவு தொல்லைகள், ஹிந்தி காரணமாக இந்த மாகாணத்தில் ஏற்படும் என்று நாம் எச்சரிக்கை செய்வதை ஏற்று நடப்பர்.

தன்னைப் பெற்றதாய், தாய் நாடு, தாய் மொழி, ஆக ஒருவனுக்கு மூன்று தாய்மார் என்று நமது முதுமொழி கூறுவதுண்டு. தாயைக் கவனியாதவன் மாதாவிற்குத் துரோகம் செய்தவனாகிறான். தாய் நாட்டை நேசியாதவன், தேசத் துரோகியாகிறான். தாய் மொழியைப் பாராட்டாதவன் தாய் மொழியைக் காட்டிக் கொடுத்த துரோகியாவான்.

ஏசுநாதரைக் கொஞ்சம் பணத்துக்காகக் காட்டிக் கொடுத்த ஜூடாஸ் என்று தாய் மொழியைக் காட்டிக் கொடுப்பவனை நாம் கூறுவோமாக. ஜூடாஸ் செய்த சதி காரணமாக ஏசுநாதர் கொல்லப்பட்டார், ஆனால் கிருஸ்து மார்க்கம் நிலைத்து நிற்கிறது. அது போன்றே திராவிட மொழிகளும் நிலைத்து நிற்குமாக.

இந்தி ஒழிக! திராவிட மொழிகள் வாழ்க!!

★ இந்திக் கொடுமை

சர். எம். கிருஷ்ணநாயர்

நமது சென்னை மாகாணத்திலே உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலேயும் முதல் மூன்று பாரங்களிலே ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்ற சென்னை (காங்கிரஸ்) சர்க்காரின் யோசனையை, நாம் முழுபலத்துடனும் கண்டிக்கும் பொருட்டு இந்தப் பழம் பெரும், சரித்திர சம்பந்தமான காஞ்சியில் கூடியுள்ளோம்,

பல மொழிகளின் சிக்கலான நுட்பங்களைக் கற்றுத் தெளியக்கூடிய மேதாவிகள் இருக்கிறார்கள் என்றாலும் அப்படிப்பட்டவர்கள் தொகை மிகக் குறைவானதாகும். சாதாரண புத்தியுள்ள ஆண், பெண், அதிலும் பள்ளிச் சிறுவர்கள், இவர்களைக் குறித்தே நாம் இந்தப் பிரச்சினையைக் கவனிக்கிறோம்.

நம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களிலே, இங்லிஷ், கணக்கு, சரித்திரம், பூகோளம் தாய் மொழி ஆகியவைகளை இலக்கண சுத்தமாய்க் கற்கவேண்டி இருக்கிறது. இவ்வளவு விஷயங்களுடன் ஹிந்தியையும் சேர்த்து அக் குழந்தைகள் படிக்கவேண்டுமெனக் கட்டாயப்படுத்துவது, கொடுமை யாகும்.

ஹிந்தியை, அகில இந்தியப் பொது மொழியாக்கப் பிரயத்தனம் நடக்கும்போது கண்டிப்பாக, சிக்கல் நிறைந்த வகுப்பு, மத, விவாதங்கள் எழும்பியே தீரும்.

இந்தியாவிற்கு ஒரு பொது மொழி வேண்டுமானால், இங்லீஷ் தயாரில் இருக்கிறது. சுமார் 75 வருடங்களாகப் படித்த இந்திய உலகிற்கு, இங்கிலீஷே பொது மொழியாக இருந்து வந்திருக்கிறது. தினே, தினே, அதன் வளர்ச்சி விரிந்து, ஊன்றி வருகிறது, 1885-ம் ஆண்டு பம்பாயிலே. பல மாகாணப் பிரமுகர்கள் கூடி அகில இந்திய தேசிய காங்கிரசைத் துவக்கியதற்குக் காரணம், ஆங்கிலமொழி ஞானமே யாகும்.

அடுத்தடுத்துக் காங்கரஸ் பல இடங்களில் கூடினதற்கும் சமுதாய, தொழிலாராய்ச்சி சம்பந்தமான, பற்பல மகாநாடுகள் பல சமயங்களில் இந்தியாவிலே பல முக்கியமான இடங்களிலே நடைபெற்றதற்கும் ஆங்கிலமொழி ஞானமேதான் காரணம். காங்கரஸ் அரசாட்சி செலுத்தும் பல மாகாணங்களிலும், சட்டசபைகளில், நடவடிக்கைகள் தாய் மொழியில் நடைபெறவில்லை, ஆங்கில மொழியில் தான் நடைபெறுகிறது.

பல்வேறு காரணங்களால். ஆங்கில மொழி நம் நாட்டிலே, மதிக்கப்படும் விருந்தாளியாக வந்தாகி விட்டது. அது நிரந்

தரமாக நிலைத்து நிற்கும் தகைமைத்து. வளர்ச்சி கவர்ச்சி நிரம்பிய மொழி. எவ்வளவு நுட்பமான, புலப்படுத்துவதற்காய எண்ணங்களாயினும், அந்த மொழியிலே அழகு பெற விளக்கமுடியும். விஞ்ஞானம் போன்ற விலைமதிக்கொணா வித விதமான பல மணிகள் ஒளிரும் மொழி. / தாய்மொழி நமது அன்னையினும் இனியது. எப்படிப்பட்ட அன்னிய மொழியானாலும் அது எவ்வளவு வளர்ச்சி, கவர்ச்சி, வனப்புப் பொருந்தியதாக இருப்பினும் அது சாதாரண மக்களின் மொழியாக முடியாது. இம் மாகாணத்தில் பேசப்படும் தமிழினுடையவும் மற்றைய திராவிட மொழிகளினுடையவும் ஸ்தானத்தை, ஆங்கிலமும் பெற முடியாது. தாய்மொழி நம் தாய்மார் நம்மைத் தாலாட்டி வளர்த்த மொழி; சிறுவர்களாக இருந்தபோது, கருத்துக்கள் தெளிவடையாதிருந்தபோது, எண்ணங்களை உருவாக்கி வெளியிட ஏதுவாக இருந்த மொழி. அன்னிய பாஷையிலே எவ்வளவுதான் பாண்டித்தியம் பெற்றிருந்த போதிலும், பிற்காலத்திலே காதல், அன்பு, கோபம், சோகம் முதலிய மனோ பாவங்களைச் சித்தரித்துக் காட்ட உதவும் மொழி. நமது மரணப் படுக்கையிலே, நம் மரண வேதனையைத் தெரிவிக்க உபயோகிக்கும் மொழி. அப்படிப்பட்ட தாய் மொழிக் கீடானது வேறொன்றுமில்லை. நமது தாய் மொழிகளாகிய தமிழ் முதலிய திராவிடமொழிகளை, காத்துவளர்த்து, பரிபாலிப்பது நமதுகடமையாகும்ஆங்கிலத்திலுள்ள கலைகளை. சிறப்பாக விஞ்ஞான நூல்களைத் தமிழிலே மொழிபெயர்த்தல், தாய் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், வளர்ச்சியும் தேடுவதாகும்.

இம்மாகாண மொழிகளுக்கு ஆக்கந்தேட வேண்டியது சென்னை சர்க்காரின் கடமையாகும், வீணுக்குப் பணத்தையும் பலத்தையும், ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குதல் போன்ற திட்டங்களுக்காக விரயமாக்காமல், திராவிட மொழி வளர்ச்சிக்காக, பண்டிதர்களுக்குப் பண உதவி செய்து, திராவிடமொழி வளர்ச்சிக்குச் சென்னை சர்க்கார் உதவி அளித்தால், நாட்டிற்கு நிரந்தரமான நன்மை அளித்தவராவர்.

ஐக்கிய மண்டலத்திலே, முதல் மூன்று பாரங்களிலே, தமிழைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென திட்டம் வகுத்தால், அந்த மாகாணத்து மந்திரிகளும், மக்களும் எப்படி அதை "வரவேற்பார்கள்" என்பதை நாம் சிந்தித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

அப்படி இருந்தும், 'சென்னை மாகாண மந்திரிகளே, ஹிந்தியை நமது பள்ளிக்கூடங்களில் நமது சிறு பிள்ளைகளுக்குக் கட்டாயமாக்கத் துணிந்து நிற்பதைக் காண்கிறோம். இது ஒரு பெரும் துர்அதிர்ஷ்டவசமான சம்பவமாகும். இதிலிருந்து நாம் மீளுவோமாக.

தாய்மொழி வழியாக உயர்தரக் கல்வி கற்பித்தல்

டாக்டர். அ. சி. செட்டியார் அவர்கள்

நமது தேச மக்களுடைய கல்வி நிலை ஆங்கிலேயரது தொடர்பினால் வளர்ச்சியுற்றதென்றாலும், படித்தவர்களெல்லாம் படியாதவர்களுக்குத் தாம் கற்றதை அறிவித்து அவர்களையும் உயர்த்துவார்கள் என்று எதிர்பார்த்தபடி நிகழவில்லை. இதற்கு முக்கிய காரணம், படித்தவர்கள், தாம் கற்றதை ஆங்கில மொழிவாயிலாகக் கற்றிருப்பது. தாம் கற்றதைப் பாமர மக்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய அவர்கள் மொழியில் சொல்லமாட்டாமையால், எதிர்பார்த்த பயன் விளையவில்லை. படித்தவர்கள் என்றும் படியாதவர்கள் என்றும் இரண்டு வேறு சாதிபோலப் பிரிவு ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கது. இந்நிலையை மாற்றத் தாய்மொழி வாயிலாகப் பாடங்களைக் கற்பிக்க வேண்டுவது அவசியம் என்பதை மறுக்க முடியாது. தாய்மொழி வாயிலாகக் கற்பித்தால் நேரே உள்ளத்தோடு ஒட்டுகிறது என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்த உண்மை. வேறொரு மொழி வாயிலாகக் கற்றுக்கொள்வதில் உள்ள சிரமம், காலநீட்டம் ஆகியவை தாய்மொழிவழியாகக் கற்றுக்கொள்வதில் இல்லை. தாய்மொழி வாயிலாக வினாக்களுக்கு விடை அளிப்பதும் எளிது.

ஆனால், ஆங்கிலம் மூலமாகவே உயர்தரக் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்பதற்குச் சிலர் காரணம் காட்டுவார்கள். அவற்றை ஆராய்வோம். விஞ்ஞானம் முதலிய கலைகள் அடையும் வளர்ச்சியைக் குறித்தும் மாறுதல்களைக் குறித்தும் ஆங்கிலத்திற் புத்தகங்கள் அடிக்கடி வெளிவருகின்றன. ஆதலால் ஆங்கில வழியே இருந்தால் நல்லது என்பர் சிலர். ஆயினும் இவ்வளர்ச்சியைப்பற்றியும் மாறுதல்களைப் பற்றியும், ஆசிரியர்கள் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்குங்கால் சொல்லத்தான் செய்வார்கள். அன்றியும், கல்லூரிப் பத்திரிகை வெளியீடுகள் மூலம் அம்மாறுதல்கள் அறிவிக்கத்தான்படும். மேலும். மாணவர் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகவோ மூன்றாம் மொழியாகவோ கற்றிருப்பாராதலால், ஆங்கிலத்தில் வெளியாகும் புத்தகங்களைப் படித்துத் தாய்மொழி வழியாகப் பெற்ற அறிவினை விருத்தி செய்துகொள்ளக்கூடும், விருத்தி செய்துகொள்ளவேண்டும்.

இந்திய மொழிகள் இன்னும் நன்றாக வளர்ச்சியடையவில்லை

யாதலால், அவைவாயிலாகக் கற்பிக்க முடியாது என்பது சிலர் வாதம். இது பொருந்தாது. இந்திய மொழிகளை நாம் உபயோகப்படுத்தாமலும், போதனைக்கு உரிய கருவியாக மதிக்காமலும் வைத்திருந்தால், அவை எப்படி வளர்ச்சியடையும்? அவற்றைப் பயன்படுத்திப் பார்த்தால் அன்றோ அவை வேண்டியவளவு வளரும்.

ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கு மாணவர் சென்று படிக்கத் தடை உண்டாகும் என்று சிலர் வருந்துவர். மாகாணம் விட்டு மாகாணம் செல்வோர் தொகை சிறிதேயாகும். அப்படிச் செல்வோர் மற்றொரு மாகாணத்தில் உள்ள மொழியையும் படித்துத்தான் ஆகவேண்டும், படிக்க வேண்டும் என்ற அவா அவர்க்கு எழுதல் இயல்பு. அதற்காக வருந்த வேண்டா.

பல்வேறு மொழிகளில் புதிதாகப் புத்தகம் எழுதுவதற்குப் பணம் நிரம்பச் செலவாகும் என்பது சிலர் வாதம். இதற்கு அரசாங்கங்கள் அஞ்சக் கூடாது என்பதே அறிஞர்கள் கருத்து.

ஆங்கில மொழிவாயிலாகக் கற்றால் உலகத்தொடர்பு இருக்குமென்றும், அதனைத் தாய்மொழியாக உடையோர் 20 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்றும், அதனை அரசியல் மொழியாகக்கொண்டோர் தொகை 50 கோடிக்குக் குறைவன்று என்றும், உலக அறிவினைப் பெறுவதற்கு அதுவே ஏற்ற சாதனமென்றும் சில அறிஞர் கருதுவர். ஆங்கில மொழியென்பது நம் வீட்டிற்கு வெளியேயிருந்து காற்றையும் ஒளியையும் நல்கக்கூடிய சாளரம் என்று வைத்துக்கொண்டாலும் நம் வீட்டின் அடிப்படையான கல், சுண்ணாம்பு முதலியவை தமிழாகவே இருத்தல் வேண்டும். 1941-ல் எடுத்த ஆட்டொகைக் கணக்குப்படி, பிரிக்கப்படாத இந்தியாவில் 39 கோடி மக்கள் இருந்தார்கள். அவருள் படித்தவர்கள் 4 1/2 கோடிப்பேர், இந்த நாலரைக் கோடியில் ஆங்கிலம் அறிந்தவர் எட்டுப்பேருக்கு ஒருத்தர். மொத்தத்தில், நூறு பேரில் 15 பேருக்கு எழுதப்படிக்கத் தெரியும் என்றால், அந்தப் பதினைந்து பேரில் இரண்டு பேருக்குத்தான் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியும். ஆங்கில அரசாட்சி 150 ஆண்டுகள் இருந்தும், இங்கே நூற்றுக்கு இரண்டு பேருக்குமேல் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியவில்லை என்றால் ஆங்கிலம் நம் உடம்போடு உள்ளத்தோடு எந்தக் காலத்திலும் ஒட்டாது என்பது வெளிப்படை அன்றோ. ஆங்கில மொழியைப் பாமர மக்களும் கற்றுத் தேர்ந்து சிறப்பார்கள் என எதிர்பார்ப்பது தகாது. ஆங்கிலமொழி துணையாக அறியப்பட வேண்டியவற்றை அறியும் பொருட்டுத்தான் ஆங்கிலத்தை அறவே

அகற்றுமல் அதனை 2வது மொழியாக வைத்து இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. சென்னை அரசாங்கம் 3-வது மொழியாக வைக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆங்கிலத்திற் கற்போர் கற்க, தாய்மொழி வாயிலாகக் கற்போர் கற்க என விட்டு விடக்கூடாதா என்பது சிலர் கேள்வி. இப்படி விட்டுவிட்டால், அவசியமில்லாத இரண்டு பிரிவுகளை ஏற்படுத்த நாம் உதவி செய்தவர் ஆவோம். அதனுல் ஏதாவது ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

சம்ஸ்கிருதம் இந்திய மொழிகளுக்குத் தாய் என்னும் நிலையில் இருப்பதால், அதன் வழியாக இந்தியா முழுதும் பாடங்களை ஏன் கற்பிக்கக்கூடாது. எனச் சிலர் கேட்கிருர்கள். இங்கிலீஷ் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை 100-க்கு இரண்டு என்றுல், சம்ஸ்கிருதம் எழுதப்படிக்கத் தெரிந்தவர் தொகை நூற்றுக்கு ஒன்றிலே பாதிகூட இராது. சம்ஸ்கிருதம் பேசத் தெரிந்தவர் தொகையோ பின்னங்களில் தான் இருக்கும். அம்மொழிவாயிலாகக் கற்பிக்க வேண்டுமென்ருல், தென் இந்தியாவில் எழுத்தறியாமையை விலை கொடுத்து வாங்குகிரேம் என்பதே பொருள். வங்காளம், ஒரியா, மராத்தி, குஜராத்தி, சிந்தி, ஹிந்தி ஆகிய மொழிகள் சம்ஸ்கிருதவழியாக வந்தவையாய் இருக்கலாம். ஆனல், தென்னிந்திய மொழிகளாகிய தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியவை சம்ஸ்கிருதத்தின் வழியாகத் தோன்றிய மொழிகள் அல்ல, தனிக் குடும்பத்தவை எனப் பேரறிஞர் கால்டுவெல் போன்றவர் ஐயமின்றி எழுதிப்போயிருப்பவும், அதனை அறியாது சிலர் மலைவது விந்தையாய் இருக்கிறது. இந்தத் தென்னிந்திய மொழிகள் தனியாக நிற்பவை என்பது டாக்டர் எஸ். கே. சாத்தரிஷி, பண்டித ஜவஹர்லால் நேரு, சர். அக்பர் ஹைதாரி, சர். கே. ராமுண்ணி மேனன் ஆகிய பேரறிஞர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆதலால், சம்ஸ்கிருத வழியாகக் கலையறிவினைத் தமிழர்க்குத் தருவோம் என்றல் அடாது.

இனி, ஆங்கிலத்திலேயே போதிக்கலாம் அல்லது ஹிந்தி பொது மொழியானதும் ஹிந்தி வாயிலாகப் போதிக்கலாம் என இந்திய கவர்ண்மெண்டு கமிட்டிகளிற் சிலர் கூறுவதை ஆராய்வோம். 14 கோடி மக்கள் ஹிந்தியை அறிவர் ஆதலாலும், இந்தியாவிற்கென ஒரு பொது மொழி இருத்தல் நல்லது ஆதலாலும், தென்னிந்தியாவிலும் எல்லாப் பாடங்களையும் ஹிந்தி வாயிலாகவே போதிக்க வேண்டும் என்பர் சிலர். இதுவும் பொருந்தாது. பெரும்பான்மையோர் ஒரு மொழியை அறிவர் என்ற காரணத்தால், அதனை

எல்லோர்க்கும் ஒத்த மொழியாகக் கொள்ள வேண்டும் என்று வலியப் புகுத்துதல் ஜனநாயக முறைக்கு ஒவ்வாது. சிறுபான்மையோருடைய கலை, மொழி, பண்பு, இவற்றைப் பாதுகாவா தொழிதல் ஜனநாயக ஆட்சிக்குப் புறம்பானது. இந்திய மக்கள் ஒரு மாகாணம் விட்டு வேறொரு மாகாணம் போவோர், இந்திய மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு வைத்துக்கொள்வோர் ஆகியோர்க்குப் பொது மொழியாக ஹிந்தி இருக்கலாம். ஆனால், அம்மொழி வழியாகவே எல்லாக் கலைகளையும் போதிப்போம் என்றால், ஆங்கிலம் வழியாகவே போதிக்கலாமே. ஆங்கிலத்திற் போதிக்கக்கூடாது என்பது ஆங்கிலேயரிடம் உள்ள வெறுப்பால் அன்று. இதைப்பற்றி அடிக்கடி காந்தியடிகளும் பண்டித ஜவஹர்லால் நேருவும் சொல்லியுள்ளார்கள். மனத்தில் அழுத்தந் திருத்தமாகப் பதிவதில்லை என்றும், காலம் அதிகம் பிடிக்கிறதென்றும் அன்றோ ஆங்கிலத்தை விலக்க முயலுகிறோம். அப்படியிருக்க, ஹிந்தியில் கற்பித்தால் நன்றாகப் பதியுமா, காலம் அதிகம் பிடிக்காதா என யோசிக்க வேண்டும். தமிழிலே கற்பித்தால் நேராகப் பதிவது போலவும் விரைவில் விளங்குவது போலவும், இந்தியிற் கற்பித்தால் இராது என்பது எளிதிற் புலப்படும். இதற்குப் பல சொற்கள் சொல்ல வேண்டா. இந்திய மக்கள் அனைவரும் ஒரு மொழி வழியாகக் கற்பது நல்லது என்றால், அதைவிட நல்லது உலக மொழியாகிய ஆங்கிலம் வழியே கற்றல். தமிழ் மக்களைப் பொருத்த வரையில், ஆங்கிலமும் ஹிந்தியும் அவர்களுக்கு ஒரேவிதக் கடுமையுடையனவே. ஹிந்தி நம் தேசமொழி என்ற அன்பு காரணமாக அதன்வழியே படித்தல் நல்லது என்றால், தமிழ் என் தாய்மொழி என்ற பேரன்புகாரணமாக அதன் வழியேதான் படிப்பேன் எனக்கூறும் தமிழ்மகன் குறை கூறத்தக்கான் அல்லன்.

ஹிந்தி, வங்காளத்தார், ஒரியர், குஜராத்தியர், மராத்தியர், தமிழர் மலையாளத்தார், கன்னடத்தார் ஆகியோருக்குப் பண்பாட்டுமொழியாகவே மாட்டாது. பஞ்சாபியர், ராஜஸ்தானத்தார், பீஹாரியர், ஐக்கிய மாகாணத்தார் ஆகியோருக்கு ஹிந்தியோ உருதுவோ பண்பாட்டு மொழியாக இருக்கலாம். அதனால் அரைகுறை ஹிந்தியில், தப்பான ஹிந்தியில், கடைத்தெரு ஹிந்தியில் கலைகளைக் கற்றுக்கொள்வதை விட எளிய பிழையில்லாத தமிழிற் கற்றுக்கொள்வது மேலன்றோ?

ஹிந்தியைத் தென்னிந்தியமக்களும் அறிவார் எனக் கணக்கிற் சேர்த்துக்கொள்வாரும் உண்டு. அவர்கள் ஹிந்தி சினிமாப்படங்கள் தென்னிந்தியாவில் மாதக் கணக்கில் நடைபெறுவதால்

அவற்றைப் பார்க்கப் போவோர் ஹிந்தி தெரிந்தவராகவே இருப்பர் என ஊகிக்கிறார்கள். அப்படங்களைப் பார்க்கப் போவோருள் ஏதேனும் பொழுதுபோக்கிற்காகப் போவோர் தொகையும், நடிப்பு, ஆடல், புரியாத இசை, திரைப்பட ஒழுங்கு முதலியவை காரணமாகப் போவோர் தொகையும் மிகுதி என்பதை அவர் அறியார்போலும்.

ஹிந்தி சமஸ்கிருதத்தோடு தொடர்புடைய மொழியாதலாலும் தமிழர்களும் ஹிந்தியை எளிதிற் புரிந்து கொள்வர் என்று சொல்லுவோர் கூற்று எவ்வளவு பொருத்தம் அற்றது எனபதற்கு ஓர் உதாரணம் காண்போம்.

ஹிந்தி — தமிழ் — ஆங்கிலம்

சங்க்ஷேப	சுருக்கம்	Abbreviation
யோக்	கூட்டல்	Addition
மிஸ்ரம்	கலப்பு	Complex

தமிழிற் கூறினால் புரிவதைப் போல ஹிந்தியிற் கூறினால், சாதாரண தமிழ் மகனுக்குப் புரியுமா? அவனுக்கு ஹிந்தியும் ஆங்கிலமும் ஒன்றுதான். ஆனால் வங்காளத்தாருக்கோ, மராத்தியருக்கோ, குஜராத்தியருக்கோ, வேறு சில வட இந்தியருக்கோ ஹிந்தியிற் சொல்வதும் அவர்கள் மொழியிற் கூறுவதும் ஏறத்தாழ ஒன்றாய் இருக்கும். அதனால், வட இந்தியருக்கு ஒத்தது தென்னிந்தியருக்கும் ஒக்கும் என்பது ஒவ்வாது, ஒவ்வாது.

இவ்வாறு கூறுகின்றவர்களைத் தேசியத்திற்கு விரோதமானவர்கள் என்பதும் பொருந்தாது. ஸ்விட்சர்லாந்தில் பல மொழி இருந்தும், தேசியத்திற்குக் கேடு இல்லை. பிரிட்டனிலேயே இங்கிலீஷ், வெல்ஷு, கேலிக் மொழிகள் உள. பிரான்ஸ், ஸ்பெயின், சோவியத் ரஷ்யா, சைனு, மெக்சிகோ, மத்திய தெற்கு அமெரிக்க சமஸ்தானங்கள், கனடா, தென்னுப்ரிக்கா, செக்கோஸ்லொவாக்கியா, பெல்ஜியம், ஆப்கனிஸ்தான் ஆகியவை பன்மொழி அரசாங்கங்கள். உலக ஐக்கிய தேச ஸ்தாபனத்தில்கூட ஒரு மொழி கட்டாயப்படுத்தப்படவில்லை. இங்கிலீஷ், பிரஞ்சு, ருஷ்ய, சீன, ஸ்பானிய மொழிகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. முக்கியமாக இங்கிலீஷ் பிரெஞ்சு ஆகிய இரண்டு மொழிகளிலும் எல்லா நடவடிக்கைகளும் மொழிபெயர்க்கப்படவேண்டும். ஒரு மொழியைக் கட்டாயப்படுத்தினால், அதற்கு வலியச் சிறப்பினை நல்கியதாகும் என்ற எண்ணத்தால் அங்கே ஒரு மொழியே கட்டாயப்படுத்தப்படவில்லை. **இந்தியாவிலும், கலைச் செல்வங்களை ஹிந்தி வழியாகவே நல்குவோம் எனக் கட்டாயப்படுத்துவது பொருந்தவே பொருந்தாது.** தமிழ்நாட்டில், நம் தாய்மொழியாகிய தமிழ் வாயிலாகவே கற்பிக்கவேண்டும். இனி தமிழிற் கலைச்சொற்கள் உண்டாக்

குவதைப்பற்றிக் கவனிப்போம். அவரவர் விருப்பம்போல் உண்டாக்கி வெளியிட்டால், நாளடைவில் தக்கவற்றைக்கொண்டு மற்றவற்றைத் தள்ளலாம் எனச் சிலர் கூறுவர். அது தகாது. இம்முறை முடிவு செய்ய வேண்டிய காலத்தைத் தள்ளி வைப்பதாக இருக்குமே யன்றி வேறன்று. இவ்வாறு அவரவர் விருப்பத்திற்கு விடுவதால் மாணவரும், ஆசிரியரும், பரீட்சகரும் தடுமாற்றம் அடைவர். ஆதலால், ஒரு நெறிப்படுத்துவதே நேரியதாகும். தாய்மொழியிலேயே கிடைக்கக்கூடிய சொற்கள் இருக்கும்பொழுதும், நாம் அறிந்த பொருள்களைப்பற்றிப் பேசும்பொழுதும் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கக் கூடாது. உதாரணமாக இரும்பு, பொன், வெள்ளி, அணு ஆகியவை நாம் அறியாதன அல்ல. இப்பொருள்களைக் கூற, லோஹ, சோண, சண்டி, ஜௌஹ Loha, Sona, chandi Jauha.........என்ற ஹிந்துஸ்தானிச் சொற்களையோ, Iron Gold, Silver, Atom என்ற ஆங்கிலச் சொற்களையோ கடன் வாங்கக்கூடாது. நாம் அறியாத பொருள்கள், பிறதேசங்களில் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள் ஆகியவற்றின் பெயரை ஆங்கிலத்தில் உள்ளபடியே ஏற்றுக் கொள்ளுதல் தக்கதே.

சோடியம், பொட்டாஷியம் போன்ற இரசாயனப் பண்டங்கள் பெயரையோ கால்டைட் போன்ற தாதுப்பொருள்களின் பெயரையோ மொழிபெயர்க்கப் பெருமுயற்சிகள் வேண்டா. அவற்றிற்கு உரியனவாகக் கடுந் தமிழிலோ, சம்ஸ்கிருத வழியே வந்த புரியாத தமிழிலோ மொழிபெயர்ப்பதைவிட ஆங்கிலச் சொல்லை அப்படியே வைத்துக்கொண்டால், உயர்தரக் கல்வி பெறுகின்ற மாணவர் பிறகு வெளிநாடுகள் செல்லும்பொழுதும், ஆராய்ச்சி செய்யும்பொழுதும் இடர்ப்படமாட்டார்.

எனவே, நம் தாய்மொழியில் முன்னரே வழக்கில் உள்ளனவாய் இருப்பனவும், ஐயந்திரிபின்றிப் பொதுவாக எல்லோருக்கும் விளங்கக்கூடியனவாய் இருப்பனவும் ஆன சொற்களை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு வைத்துக்கொண்டு, நல்ல புத்தகங்களை வெளிப்படுத்த அறிஞர் முன்வரவேண்டும். ஒவ்வொரு பொருளைப்பற்றியும் உள்ள முக்கியமான தேர்ந்த நல்ல புத்தகத்தை மொழிபெயர்க்குமாறும் பொதுமக்கட்கு விளங்கும் மொழியில் எழுதுமாறும் தூண்டுவது அரசாங்கத்தின் கடன். அவ்வழியில் சென்னை அரசாங்கமும் பணியாற்ற முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது. அதன் குறிக்கோள் நிறைவேறுக. கலைக்களஞ்சிய முயற்சியும், உயர்தரக் கல்வி நிலையங்களுக்கு உரிய புத்தக வெளியீட்டு முயற்சியும் வெற்றி பெறுக.

(திருச்சி, வானொலியில் 17-6-48-ல் நிகழ்த்திய சொற்பொழிவு)

தொடர் கதை:

[முன்பு: மாதவனும் மூர்த்தியும் இலக்கியப் பித்தன் தந்த "பொற்சிலை" என்ற கையெழுத்துச் சுவடியை வாசிக்கிறார்கள்.

இலக்கியப் பித்தன் பொற்சிலையைக் காதலித்து அவளோடு அவளது தகை இல்லத்திற்குச் செல்கிறான். பொற்சிலையின் தாத்தாவின் புரட்சிகரமான கருத்துக்கள் நிறைந்த பேச்சு, அவனது உள்ளத்தைக் கவர்கிறது. ஒரு நாள் பொற்சிலை தன்னுடைய பெற்றோரின் வரலாற்றைக் கூறுகிறாள். அவளது தாயின் பெயர் பொற்கொடி தந்தையின் பெயர் சிலைமன்னன்.

பொற்கொடியும், சிலைமன்னனும் கள்ளத் தனமான காதல் அணைப்பில் ஒரு நாள் மெய் மறந்திருந்ததைக், கிழவர் பார்த்து விடுகிறார். கோபத்தால் அவரது கண்கள் சிவக்கின்றன! பிறகு....]

மூண்டுவிட்ட கோபத்தால், மூலிகையையும் பறிக்காமல் தம் வீடு திரும்பினார் கிழவர். வாயிற் படியில் நின்றுகொண்டிருந்த வாலி, வழக்கத்திற்கு மாறாக பெரியார் மிக வேகமாக வருவதையும், ஆத்திர மிகுதியினால் அவரது கண்கள் சிவந்தும் முகம் விகாரமடைந்து இருப்பதையும், கண்டு, பயந்து அவரருகில் சென்றான்.

" ஐயா, என்ன நடந்தது? " என்று வாலி அச்சத்தோடு வினவினான்.

" நடந்தது !...........பேசாமல் போ ! தொந்தரவு செய்யாதே !" என்று கோபத்தோடு கூறிவிட்டுத் தன் அறைக்குள் சென்று, சந்தனக்கட்டை ஆசனத்தில் சோர்ந்து உட்கார்ந்தார்.

ஆலமரத்தடியில் தன் ஆசை மகள், அன்னிய இளைஞன் ஒருவனின் அணைப்பில் மெய்மறந்திருந்த காட்சி — அவர் கண்களைச் சிவக்கச்செய்த காட்சி — அவர் மனக்கண்முன் வந்து நின்றது. விரைக்க விரைக்க அறையின் சுவர்களைப் பார்த்தார். பழைய ஓலைச்சுவடி கட்டுகளை உற்று நோக்கினார். அந்தக் கட்டுகளில், அகநானூறு அவரைப் பார்த்துச் சிரித்தது. முத்தொள்ளாயிரமும் குறுந்தொகை

யும் ஒன்றோடொன்று பேசி கலகலவென நகைத்தன! திருக்குறளில் இருபால்களையும் பின்னே தள்ளிவிட்டு, காமத்துப்பால் மட்டும் முன்னேவந்து காதல், காதல் என்று ஆனந்தப் பள்ளு பாடியது! இறையனார் அகப்பொருளும் ஐங்குறுநூறும், நற்றிணையும், கலித்தொகையும் இன்ன பிற நூல்களும் காதலின் பண்பு, மேன்மை, சிறப்பு ஆகியவற்றைப்பற்றி மாறி மாறி பேசத் தொடங்கின! கிழவர் யோசனையில் ஆழ்ந்தார். தம்முடைய காளைப்பருவம் நினைவிற்கு வரவே, அப்பொழுது நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்ணெதிரில் தோன்றித்தோன்றி அவரது கோபக்கனலைச் சிறிது சிறிதாகத் தணிக்க ஆரம்பித்தன.

"தடைகளை உடைத்துக் கொண்டு பொங்கி ஓடும் புது வெள்ளம்! தத்தி தத்திக்குதிக்கும் குயிற்குஞ்சு இறக்கை முளைத்ததும் இனிய குரலால் பண்ணிசைத்துப் பறந்தோடும்! மொட்டு மலரானால் மணம் வீசும்! இவை இயற்கை! வயது வந்த பெண்ணின் உள்ளத்தில் காதல் உணர்ச்சி பீறிடுவதும் இயற்கை! காற்றில் அசைந்தாடும் மல்லிகைக்கொடி மரக்கிளை கிடைத்ததும் பற்றிப்படர்வதைப்போல, நரம்புகளில் காதல் நர்த்தனம் செய்ய ஆரம்பித்துவிட்ட மலருடலாள் காளை ஒருவனின் மார்பில் ஒன்றுகினும் ஒருநாள் இணைந்துதான் ஆகவேண்டும். இது இயற்கை! அப்படி இருக்க பொற்கொடியின் செயலுக்கு நான் ஆத்திரமடைவது அறிவுடைமையா?... ...." இப்படி அப்பெரியார் யோசித்து, தம் மகள் மேல் யாதொரு தவறுமில்லை என்று முடிவிற்கு வந்தார்.

அறையினுள் இருந்த பொற்கொடி தன் தந்தை ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதையும், அவர் முகத்தில் பலவித மாற்றங்கள் ஏற்படுவதையும் கண்டு, உள்ளம் திடுக்கிட்டாள்.

"அப்பா!" என்று மெல்லிய குரலில் அழைத்தாள்.

"பொற்கொடி! எப்பொழுது வந்தாய்! இந்நேரம் எங்கேயம்மா சென்றிருந்தாய்?" என்று கிழவர் வழக்கமான பரிவான குரலில் பேசினார்.

"நான் எங்கும் போகவில்லையே. தோட்டத்தில்தான் அப்பா இருந்தேன்!" என்று முதல் முதலாகப் பொய் கூறத் தொடங்கினாள் இளம்பெண்!

ஆசையோடு மகளைத் தட்டிக் கொடுத்துவிட்டு அறையை விட்டு வெளியில் வந்தார் கிழவர். வாலியை அழைத்துக் கொண்டு நிலா வெளிச்சத்தில் தனியான இடத்திற்குச் சென்றார்.

"வாலி, உனக்கொரு வேலை சொல்கிறேன். திறமையோடு அதனை நீ முடிக்கவேண்டும். என்ன சொல்கிறாய்?"

"தாங்களிட்ட வேலையைச் செய்யத் தவறியதுண்டா ஐயா?"

"மிகவும் ரகசியமான வேலை இது!"

"சரி!"

"நாளைய தினம் முழுவதும் நீ காட்டினுள் மறைவான இடத்தில் ஒளிந்துகொண்டிருக்கவேண்டும். ஆற்றங்கரையோரமாக அழகான வாலிபன் ஒருவன் வருவான். அவனது தோள்கள் திரண்டிருக்கும். மார்பு பரந்திருக்கும். தலைமயிர் சிறிது சுருண்டிருக்கும் .... அவனிடம் சென்று நீயாகப் பேச வேண்டும். பழக வேண்டும். அவனது குணம், அறிவு, தொழில் இவற்றை அறிந்துகொண்டு வந்து என்னிடம் நீ கூற வேண்டும்.......இதனைச் செய்ய உன்னால் முடியுமா?"

"வாலியால் முடியாததும் இருக்கிறதா? அவனைப் பற்றி நாம் ஏன் அறியவேண்டும்?"

"அதனைப் பிறகு கூறுகிறேன்."

மறுநாள் வாலி காட்டினுள் சென்றான். கல்லுடைக்கும் சப்தம் கேட்டு, அவ்விடத்தை நோக்கி நடந்தான். கிழவர் கூறிய அடையாளங்களோடு ஒரு வாலிபன் அங்கு நின்றிருப்பதைக் கண்டான்.

அவனருகில் சென்று, "கல் ஏதற்காக உடைக்கிறீர்கள், எவ்விடத்திலிருந்து வந்திருக்கிறீர்கள், இங்கு எத்தனை நாட்களாக இருக்கிறீர்கள்?" இது போன்று ஒன்றன்பின் ஒன்றாக, நயமான முறையில் சிலைமன்னனை வினவினான், வாலி.

வாலியிடம் மிகுந்த மரியாதையோடு நடந்துகொண்டதோடல்லாமல், அவன் கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் அளித்தான் சிலைமன்னன். விவரங்களை அறிந்து வாலி கிழவரிடம் வந்து கூறினான்.

வாலியும் கிழவரும் ஒருநாள் சிலைமன்னனைக் கண்டு பேசினார்கள். சிலைமன்னனின் அறிவின் நுட்பமும் அடக்கமும் பெரியாரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. பொற்கொடியை அவனுக்குச் சொந்தமாக்க தீர்மானித்தார்.

பொற்கொடியும் சிலைமன்னனும் மனைவியும் மணாளனுமானார்கள். சிலைமன்னன் தன்னூர் திரும்பவே இல்லை. குகை இல்லத்திலேயே தங்கி விட்டான்.

கடவுள்களின் உருவங்களைக் கற்களில் மிகவும் திறமையாகவும், அழகாகவும் செதுக்குவதில் வல்லவன் அவன். அவனது கை உளியின் முனையில் பிறந்த பல கடவுள்கள் தான் இன்று பல கோயில்களில் உள்ளன.

சிலைமன்னன் அறிவிற் சிறந்தவன். கலைநுட்பம் அறிந்தவன் ஆனால் பழமைக்கு அடிமை! கலை என்றால் கடவுளுக்குத் தான் சொந்தம் என்ற தப்பான எண்ணத்தை அவன் கொண்டிருந்தான். நாளுக்கு நாள் சிறிது சிறிதாக அவனுக்

குப் பகுத்தறிவை யூட்டி, அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பழமை, மடமை என்ற இருட்டை ஓட்டி, அறிவு மார்க்கத்தைக் காட்டி, அவனை உண்மைக் கலைஞனாக்கினார், அந்த நரைக்கிழவர்!

சிவனின் சுடலைத் திருநடனத்தைச் செதுக்கிய கலைஞனது கைகள், சிற்றிடையாளின் உயிர் நடனத்தைச் செதுக்க ஆரம்பித்தன.

பொற்கொடியை நிற்கவைத்து அவளைப் போலவே பலவிதமான சிலைகளைச் செய்தான். அவளை நடனமாடச் செய்து, நடனத்தின் ஒவ்வொரு நிலையையும் சிலையாக்கினான். "இப்படி நில், அப்படி நில்" என்பான். அவன் எப்படி யெப்படிக் கூறுகிறானோ அவ்விதமே பொற்கொடி நிற்பாள். அவளைப் பார்த்துப் பார்த்து உள்ளது உள்ள படியே சிலையை உருவாக்கி விடுவான். சிலை செய்ய அவள் நிற்கும்போது சிறிது அசைந்தாலும், கலை ஆர்வங்கொண்ட கலைஞனுக்குக் கோபம் வந்து விடும்.

மாதங்கள் ஓடின. இளங் காதலரின் முற்றிய இன்பத்தில் பொற்சிலை குழந்தையானாள்! குழந்தையின் மழலை மொழியில் கிழவரும் பெற்றோரும் உள்ளம் பூரித்தனர்.

சில மாதங்களாகச் சிலை செய்யாதிருந்தது, சிலை மன்னனுக்குப் பைத்தியம் பிடித்ததுபோலாயிற்று. ஆகவே அன்று பொற்கொடியைச் சிலைசெய்ய நிற்கும்படி வேண்டினான். குழந்தையை அருகில் படுக்க வைத்துவிட்டு, அவள், அவன் விரும்பிய வண்ணம் நின்றாள். பெற்றோரின் வேலையை, படுத்துக் கொண்டிருந்த குழந்தை பொற்சிலை எழுந்து உட்கார்ந்து கொண்டு தலையைச் சாய்த்துச் சாய்த்துக் குண்டு விழிகளால் பார்த்துச் சிரித்தது!

ஆடாது அசையாது பொற்கொடி நின்றுகொண்டிருந்தாள். தன்னை மறந்து கலைச் சிருஷ்டியில் சிலைமன்னன் ஈடுபட்டான். சிரித்துக் கொண்டிருந்த குழந்தை சிறிது நேரம் கழித்து வீரிட்டு அழத்தொடங்கியது. ஆடினால் கணவன் கோபித்துக் கொள்வான் என்று அஞ்சி சிறிதுநேரம் அசையாது இருந்தாள், பொற்கொடி. அவளால் பொறுக்க முடியவில்லை. குழந்தை மேலும் மேலும் அழத் தொடங்கியது. தன் மகள் மீதிருந்த பாசத்தால், குழந்தையைப் பார்க்கத் திரும்பினாள்! அவ்வளவுதான்! சிலை மன்னனுக்குக் கடும் கோபம் வந்துவிட்டது! கையிலிருந்த உளியை வீசி எறிந்தான். உளி அழகி பொற்கொடியின் உயிரையே குடித்து விட்டது! கலை உணர்விலிருந்து விடுபட்ட சிலை மன்னன், தன்னால் தன் ஆசை மனைவி கொல்லப்பட்டாள் என்பதை அறிந்ததும், கதறினான், தலையில் அடித்துக்

கொண்டான்! அவனால், அந்தப் பெரிய துக்கத்தைத் தாள முடியவில்லை. முடிவில் தற்கொலையே அவனது துக்கத்திற்கு மருந்தாயிற்று!.........

....

"இது தான் அத்தான் என் பெற்றோரின் சோக வரலாறு" என்று கூறி, பொற்சிலை என் மடியில் விழுந்து விக்கி விக்கி அழுதாள்.

அவள் கண்களையும் முகத்தையும் துடைத்து ஆறுதல் வார்த்தைகள் கூறினேன்.

வாலியின் குரலைக் கேட்டு, நாங்கள் பிரிந்தோம். சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தேன். கண்மணி பொற்சிலையின் பெற்றோரின் கோர முடிவு என் உள்ளத்தைக் கசக்கி வேதனையைத் தந்தது! சென்றதைக் குறித்து வருந்துவது மதியீனம் என்றெண்ணி மனதைத் தேற்ற முயன்றேன். ஆனால் வேறொரு கவலை என் மனதைத் தன் பக்கம் இழுத்தது!

"மங்காத தமிழ் மறவர் வரலாறெல்லாம் மங்கும் வகை செய்தார்கள்:"

என்ற புரட்சிக் கவிஞரின் குரலும், "இதன் பொருளென்ன? தமிழ் மறவர் வரலாற்றுச் சுவடிகள் எவை எவை? தமிழ்க் கலைச்செல்வ ஏடுகள் என்னென்ன? அவைகள் எல்லாம் இப்பொழுது எங்கே?......... மறைந்துவிட்டன! யாரால் மறைக்கப்பட்டுவிட்டன? இவையெல்லாம் நீ அறிந்ததுண்டா தம்பி?" என்ற பெரியாரின் குரலும் என் காதில் வந்து ஒலித்தன!

மறைந்த தமிழ்ப் பெரும் நூல்களைக் குறித்து அறிய வேண்டுமென்று என் மனம் துடிதுடித்தது. கிழவரின் அறையினுள் வேகமாக நுழைந்தேன். அப்பொழுது அவர் ஏதோ ஒரு பழைய சுவடியைப் புரட்டிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், அந்த ஏட்டைக் கீழே வைத்துவிட்டு "உட்கார் தம்பி" என்று கூறினார். உட்கார்ந்தேன்.

"தம்பி, ஏன் உன் முகம் வாடி இருக்கிறது?"

"அழிந்த தமிழ் நூல்களைப் பற்றி அறியவேண்டுமென்று வந்திருக்கின்றேன்!"

"அழிந்த தமிழ் நூல்கள் அல்ல! அழிக்கப்பட்ட தமிழ் நூல்கள் என்று இனிக் கூறு! அதுதான் உண்மை!"

"ஆம், அழிக்கப்பட்டது நம் தமிழ்ச் செல்வம்!............... தயவு செய்து இப்பொழுது கூறுகிறீர்களா?"

"தம்பி, அதனை அறிந்ததால்தான், என் மனம் அமைதியை இழக்கவேண்டியதாயிற்று. இளம் வயதில் அதனை அறிந்து வேதனைப்பட வேண்டாம் நீ. சிறிது காலம் இன்பமாக இரு, பிறகு தெரிந்து கொள்ளலாம்."

"தாங்களா இப்படிப் பேசுகிறீர்? இன்பத் தமிழ் மொழி இழந்த கலைச்செல்வத்தை இளம் வயதில் அறியக் கூடாதா? அது தவறா?........."

"தவறொன்றுமில்லை! வீணாக ஆத்திரமடைவாய்! தோள்களைத் தடவிக் கொடுப்பாய்! இன்றைய நிலைமையில் ஒன்றும் செய்யமுடியாமல், என்னைப்போல், முடிவில் கண்ணீர் வடிப்பாய்!............."

"தங்களை வேண்டுகிறேன், மேலும் மேலும் என் பொறுமையைச் சோதிக்காமல், கூறிவிடுங்கள். அதனை அறிந்து கொள்ளும் முன்பு ஊண், உறக்கம் கொள்வதில்லை என்ற முடிவிற்கு வந்துவிட்டேன்." என்று கூறி ஆவலோடு அவரது முகத்தைப் பார்த்தேன்.

பெரியார் நிமிர்ந்து உட்கார்ந்து, பேச ஆரம்பித்தார்.

"தம்பி! தமிழை ஒழித்துக் கட்ட, குழிதோண்டிப் புதைத்து மண்ணோடு மண்ணாக்க அன்னிய இனத்தார் இதுவரைக்கும் செய்திருக்கும் சூழ்ச்சிச் செயல்களைக் குறித்து நான் கூறும் பொழுது ஆத்திரமடையக் கூடாது. ஆத்திரம் அறிவை மறைக்கும். ஆகவே பொறுமையாகக் கேட்கவேண்டும். விவரங்களை அறிய அறிய உன் நரம்புகளில் முறுக்கேறும், உன் இரத்தத்தில் கொதிப்பேறும், எனினும் சாந்தமாகக் கேட்க நீ சித்தமாக வேண்டும்!"

"ஐயா, அவ்வண்ணமே கேட்கிறேன்!"

"இன்பத் தமிழ்மொழி இன்று நேற்று தோன்றியதல்லவென்பதை நீ நன்கு அறிவாய். உலகப்பழைய மொழிகளில் நம் செந்தமிழும் ஒன்று. அன்று சிறப்புற்று, மக்கள் உள்ளங்களில் விளையாடிய பல மொழிகள் இன்று வழக்கொழிந்து, ஒளியற்று விட்டன! ஆனால் மங்காதது தமிழ்மொழியொன்றே! அரியாசனத்தில் வீற்றிருந்த அன்னைத்தமிழை அழிக்கப் பலர் வந்தார்கள்! வந்தவர்கள் வாளும் வேலும் கொண்டுவரவில்லை! அப்படி வந்திருந்தால் தமிழ்க்குலத்தில் உதித்த ஆண்மைச் சிங்கக் கூட்டம் அன்றே அவர்களை அழித்துவிட்டிருக்கும்! வெளியே சிரித்துக்கொண்டே வஞ்சக எண்ணத்தோடு வந்தார்கள், சிற்றிடை அழகிகளை உடன் அழைத்து வந்தார்கள், பிச்சை என்று ஏந்திய கரத்தோடு வந்தார்கள், தஞ்சமென்று நம் தாள்பிடித்துக் கெஞ்சினார்கள், ஆரியக் கூத்தாடிக் காட்டினார்கள்! மன்னனின் மனதை மயக்கி, தமிழின் உயிரை மாய்க்கத் திட்டமிட்டார்கள்!............... இன்று தன்னுணர்வாளர்கள் தமிழின் பாதுகாவலராகத் திகழ்வதைப்போல, அன்றும் தன்னுணர்வாளர் கூட்டமொன்று தமிழைப் பாதுகாத்தது......"

"அன்றுமா தன்னுணர்வாளர்கள் இருந்தார்கள்?" என்று ஆர்வத்தோடு கேட்

டேன். உணர்ச்சியின் உச்ச நிலைக்குச் சென்று கொண்டிருந்த பெரியாரின் குரல், வெண்கலமணி யோசையைப் போல திரும்பவும் என் காதுகளில் ஒலிக்கத் தொடங்கியது!

“தலைவர்களையும் வீரர்களையும் வழிப்பட்டு வந்தத் தமிழர்களை, ஒண்ட வந்த ஆரியர்கள் பொய்த் தத்துவங்களைப் புகன்று, ஏதேதோ கடவுள்களைத் தொழும்படித் தூண்டி வந்தார்கள். பகுத்தறிவுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட சமண சமயத்தைச் சார்ந்த தன்னுணர்வு மிக்க தமிழ் அறிஞர்கள், தமிழர்கள் தவறுன வழியில், அறிவற்ற மார்க்கத்தில் செல்வதை அறிந்து, மிக வருந்தி, அவர்களைத் தடுத்துப் பார்த்தனர். ஆரிய மாயையில் சிக்கிய மறக்குல மக்களை மீட்க முடியாதது கண்டு, உள்ளம் நொந்தனர். எனினும் ஆரியக் கொள்கைகளை, முற்றும் பகுத்தறிவு நிறைந்த சமணக் கொள்கைகள் விடாது எதிர்த்து நின்றன! சூழ்ச்சியின் உருவமான ஆரியம் சும்மா இருக்குமா? மன்னர்களின் உதவியைக் கொண்டு நேரடியாகச் சமணர்களையும், மறைவாகத் தமிழையும் ஒழிக்க ஆரியர்கள் கங்கணம் கட்டிக் கொண்டார்கள்..............தம்பி! அன்று சமணர்களில்லாமல் இருந்திருந்தால், அழிக்கப்பட்ட பல இனிய தமிழ் நூல்களைப் போலவே இன்று மிச்சமுள்ள பல நூல்களும் அழிக்கப்பட்டிருக்கும்!......” என்று கவலை நிறைந்த குரலில் கூறிப் பெருமூச்சு விட்டார்.

ஆரியத்தால் அழிக்கப்பட்ட அரும் பெரும் தமிழ்நூல்களின் வரலாற்றை அறிய நொடிக்குநொடி என் உள்ளத்தில் துடிதுடிப்பு அதிகரித்தது!

(தொடரும்)

இரா. குழூஉக்கலைவனர்.

பூம்புகார்

பழங்காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள மிகவும் பெரிய நகரங்களில் காவிரிப்பூம்பட்டினமும் ஒன்று. இதனோடு ஒப்பாக இக்காலத்தில் உள்ள சென்னை மாநகரத்தைக் கூறலாம். காவிரியாறு கடலொடு கலக்கு மிடத்தில் இப்பட்டினம் அமைந்திருந்ததால் வண்டல் மண்ணினால் வளமை பெற்று செழித்து, நிலமகள் முகமோ, திலகமோ, கண்ணோ! என்று ஐயுறும்படியான செல்வ வளத்தோடு விளங்கி நின்றது.

இந் நகரைச் சுற்றிலும் நன்செய் நிலங்கள் ஏராளமாக உள்ள மருத நிலங்களே நிறைந்துள்ளதால் கன்னலும், செந்நெலும், கமுகும், தென்னையும், மஞ்சளும், இஞ்சியும், வாழையும் பிறவும் எங்கும் நிறைந்து இனிமை தந்தன. உலகத்திலுள்ள எல்லாவகை உணவுப்பொருள்களும் இங்கேயே கிடைத்தன; எவ்வகைத் தொழில்களும் இப்பட்டினத்தில் நடந்துவந்தன. சிறந்த துறைமுகப் பட்டினமாய் விளங்கிய இந்நகர் ஒரு காலத்தில் "ககந்தன்" என்பவனால் ஆளப்பட்டதால் "காகந்தி" எனவும், ஆற்றிடைக்குறை (Delta) நிலத்தில் அமைந்திருப்பதால் "புகார்" எனவும், பெயர்களைப் பெறும்.

இப்பெரிய நகரானது இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சோழர்களின் தலை நகரமாக விளங்கி வந்தது. நகரத்தின் நடுவில் அமைந்துள்ள அரசனது அரண்மனையைச் சுற்றிலும் உள்ள பகுதி அகநகர் எனவும், அதனை அடுத்து வெளியில் கடற்கரை எல்லைவரையில் உள்ள பகுதி புறநகர் என்றும் வழங்கப்பட்டு வந்தது. அகநகர் 'பட்டினப்பாக்கம்' எனவும் புற நகர் 'மருவூர்ப்பாக்கம்' எனவும் பெயர் பெறும்.

இந்த நகரத்தைப் பற்றி நமக்கும் தெரிந்துகொள்ள ஆவல் உண்டாகின்றதல்லவா! முதலில் மருவூர்ப்பாக்கத்தைப் பார்ப்போம்.

மருவூர்ப்பாக்கம்

பச்சை நிற வானத்தைக் கிழித்துக் கொண்டு பகலவன் கிழக்கில் தோன்றுகின்றான். நிலமகள் நீல நிறப் போர்வையை விலக்கி எறிந்து விட்டுத் தன் காதலனை மகிழ்ச்சியோடு வர வேற்கின்றாள். கடல் நீர் அமைதியாக நின்று அழகைத் தருகின்றது. இக்கடற்கரையின் ஓரமாக நாம் இப்போது மருவூர்ப்பாக்கத்துள் நுழைவோம். ஞாயிற்றின் இளங்கதிர்கள் எங்கும் பரவி அதிற்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் பொன் மெருகு இட்டிக்கொண்டிருக்கின்றன. பறவைக் கூட்டங்கள் இனிய ஒலியுடன் பாடிக்கொண்டே இரை தேடப் பறந்து செல்கின்றன. இந்த அழகான காலையில் கடற்கரை ஓரமாக வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருக்கின்ற யவனர்களின் மாளிகைகளைக் காண்கிறோம். எகிப்து, கிரீசு, மெசபடோமியா, அரேபியா, பாலத்தீனம் முதலிய நாடுகளிலிருந்து வாணிகம் செய்ய வந்தவர்கள் இவர்கள். தாங்கள் எப்போதும் நீடித்த வாணிகம் செய்ய வேண்டியிருப்பதால் நல்ல வீடுகளைக் கட்டிக்கொண்டு மேன்மையுடன் வாழ்கின்றனர் இவர்கள்.

அக்காலத்தில் பெரும்பாலும் கப்பல் வழியாகவும், சிறுபான்மை தரை வழியாகவும் வாணிகம் நடந்ததால் பண்டங்களை ஏற்றவும் இறக்கவும் தகுதியாகக் கடற்கரையிலேயே இவர்கள் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நல்ல தொழில் வேலைப்பாடுகளில் சிறந்தவர்கள் இவர்கள் என்பதை அவர்கள் வீடுகளே காட்டுகின்றன.

காற்று தாராளமாய் வருவதற்காக, மான்கண்போல் அமைத்த சாளரங்கள் வைத்துக் கட்டப்பட்ட இவர்கள் மாளிகைகளும், பல பண்டங்கள் நிறைந்த பண்டக நிலையங்களும், காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கின்றன.

“ வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கண் கால்அதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயன்அறவு அறியா யவனர் இருக்கையும் ”

[வேயாமாடம் : நிலாமுற்றம். வியன்கல இருக்கை : பெரிய அணி கலன்கள் வைத்திருக்கும் மாடங்கள். கால் அதர் : காற்றுவரும் வழி. கயவாய் மருங்கில் : கடற்கரைப் பக்கம்.]

இவற்றைக் கடந்து இன்னும் சற்று உள்ளே போவோமாயின் ஒழுங்கான சில தெருக்கள் தென்படுகின்றன. இவற்றில், ஒரே வகையான மக்கள் வாழவில்லை. பல நாடுகளிலிருந்தும் வாணிகம் செய்வதற்காக வந்து தங்கிய பலவகை மக்கள் ஒற்றுமை

யோடு கூடி இவ்விடத்தில் வாழ்வது மிகவும் பாராட்டத் தக்க தாக இருக்கின்றது. கப்பலோட்டிக் காலம் கழிக்கின்றவர்கள் இவர்கள்.

"கலம்தந் திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்து இனிது உறையும் இலங்குநீர் வரைப்பும்"

[கலம்: கப்பல். புலம்பெயர்: தங்கள் நாட்டை விட்டுவந்த வரைப்பு: நிலம்.]

இதை அடுத்த தெருவில் நாம் நுழையும் போதே பல வகை மணங்கள் வந்து சூழ்ந்து நம்மைத் திண்டாடச் செய் கின்றன. பலவகை மணந்தரும் பூக்களும், குளிர்ச்சி மிகுந்த, உயர்ந்த பொதிய மலைச் சந்தனமும் இங்கே விற்கின்றார்கள். மணங்கமழும் சுண்ணங்களும் மணப்புகை உண்டாக்கும் கோட்டம், அகில்பொடி முதலான பண்டங்களும் கூட இங்கே கிடைக்கின்றன. இப்பொருள்களைத் தலைமீது சுமந்து விற்றுக் கொண்டே தெருக்களில் திரிகின்றனர் சிலர்.

" வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரும் நகர வீதியும் "

[சுண்ணம்: மணக்கலவைத்தூள். நறும்: நல்ல மணம். விரை: பல வகை மணங்கள். பகர்வனர் திரிதரும்: விலைக்கு விற்றுத்திரிகின்ற]

தாண்டுவதற்கு மனமில்லாமல் இத்தெருக்களைத் தாண்டிச் செல்கின்றோம். பட்டு நூல்களைச் சிலர் தறியிலிட்டு நெய் கின்றார்கள். ஒரு வகையான எலியினுடைய நீண்ட மயிர்களை நறுக்கி எடுத்து மிருதுவான வேலைப்பாடமைந்த கம்பளங்களைச் சிலர் நெய்கின்றனர். பஞ்சுநூல் நெசவும் பலவிடங்களில் நடைபெறுகின்றது. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே இவ்வளவு அரிய வேலைகள் நடைபெறுவதைக் கண்டு வியக்கின்றோம் நாம்.

" பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்"

[மயிர்: எலிமயிர். நுண்வினை: நுட்பமான தொழில். காருகர்: துணி நெய்வோர்.]

ஒரு பக்கத்தில் இவ்வாறு நெய்யப்பட்ட வண்ணங்களை யுடைய ஆடைகள் அடுக்கி வைக்கப்பட்ட கடைகள் காணப் படுகின்றன. சந்தனக் கட்டைகளும், அகிற் கட்டைகளும் சில கடைகளில் அடுக்கி வைத்திருக்கின்றார்கள் விற்பதற்காக.

ஒன்பது வகை மணிகளும் விற்கும் கடைகளும் அங்கே உள்ளன. பவளங்களும், முத்துகளும், பசும்பொன்னும், பிறவும்

குவியல் குவியல்களாகக் கிடக்கின்றன. இவைகளை இழைத்து செய்யப்பட்ட நகைகளும் ஓர்பால் வைக்கப்பட்டுள்ளன. ஏராளமான இவ்வணிகலங்களின் மதிப்பு எவராலும் அளந்தறிய முடியாதென்றே தோன்றுகிறது. உண்மை! நாமே மயங்கி நிற்கின்றோம் அல்லவா!

"தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையொடு அளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்"

[தூசு : ஆடையும். துகிர் : பவழமும். வெறுக்கை: செல்வம். கடை அறியா : முடிவு காண இயலாத. தலை மயங்கிய : ஒன்றோடு ஒன்று கலந்த. நனந்தலை மறுகு : அகன்ற இடத்தை யுடைய தெரு]

இத்தெருக்கள் தாண்டியதும் ஒன்பது வகை தானியங்களும் விற்கும் 'கூலத் தெரு' தோன்றுகிறது. நெல், கம்பு, கேழ்வரகு, உழுந்து, துவரை, சோளம், பயறு, தினை, சாமை என்னும் தானியங்களும், மற்றும் உணவிற்கான பொருள்களும் அம்பாரம் அம்பாரமாக இங்கே கொட்டி வைத்திருக்கின்றார்கள்.

"பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்"

[பால் வகை தெரிந்த : பலவகையாகப் பிரிக்கப்பட்டுள்ள. கூலம் : தானியம்]

இவ்வளவு நல்ல பண்டங்கள் நிறைந்த தெருக்களின் பக்கத்திலேயே சில விரும்பத்தகாத பண்டங்களும் விற்கின்றன. ஆனால், இவை விற்பதற்கெனத் தனித்த ஓர் பகுதி அந்த நாள் அரசர்கள் அமைத்திருந்தது போற்றத் தக்கதல்லவா!

ஒன்றுக்கொன்று இனமான பண்டங்களை ஒரே இடத்தில் காணலாம். பிட்டு வாணிகர்களும், அப்ப வாணிகர்களும் தங்கள் பண்டங்களை அடுக்கி வைத்திருக்கின்றார்கள். கள் விற்பவர்கள் கட்குடங்களைத் தலைமேல் சுமந்து எங்கும் திரிகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் பெண்கள்தான். இதற்கு எதிராக ஆண்கள் மீன்களைக் காவடிகளிலும் கூடைகளிலும் சுமந்து விற்கின்றனர். பல கடைகளில் இம்மீன்கள் குவிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இக்கடைகளை ஒட்டி, ஆட்டிறைச்சி முதலிய விற்கும் கறிக்கடைகள் இருக்கின்றன. இங்கே மக்கள் உண்ணத்தக்க எவ்வகை இறைச்சிகளும் பச்சையாகவே விற்கப்படுகின்றன. கடற்கரைப் பக்கத்தில் நிறையக் கிடைக்கும் பண்டமான உப்பு ஏராளமாக மலைகள்போல் சிலவிடங்களில் குவிக்கப்பட்டுக் கிடக்கின்றது. வெற்றிலைப் பாக்குக்கடை

களும், இங்கு ஏராளம். எண்ணெய் வாணிகர்களும் நிறைந் திருக்கின்றார்கள். எவ்வகை எண்ணெய்களையும் ஓரே கடை யில் பெற்றுக்கொள்ளலாம்."

"மீன்விலைப் பரதவர் வெள்உப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பல்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்"

[பரதவர்: செம்படவர். பகருநர்: விற்பவர். பாசவர்: வெற்றிலை விற்போர். வாசவர்: ஐவகைத் தாம்பூலம் விற்போர். நிணவிலைஞர்: கறிவிற்போர். ஓசுநர்: எண்ணெய் வாணிகர்.]

கடைசியாக மருவூர்ப்பாக்கத்தின் கடைசிப் பகுதிக்கு இப் போது நாம் வந்து விட்டோம். இங்கு ஏராளமான வாழ்க் கைக்கு இன்றியமையாத பண்டங்கள் செய்யும் தொழில்கள் நடைபெறுகின்றன.

வெண்கலம் உருக்கி வேலை செய்யும் கன்னார்களும், செப் புப் பாண்டங்கள் செய்பவர்களும் நிறைந்துள்ளனர் இவ்விடங் களில். தச்சர் மரங்களை அறுத்து வேலை செய்கின்றனர். கொல்லர்கள் இரும்பைக் காய்ச்சுகின்றனர். ஓவியக்காரர்கள் ஓவியம் தீட்டுகின்றனர் கிழிகளில். குயவர்கள் மண்பாண்டங் கள் வனைகின்றனர். மண்ணாற் செய்யப்பட்ட பதுமைகளும் இங்கு நிறையக் கிடைக்கின்றன. பொன்னை உருக்கும் பொன் தட்டார்களும், அப்பொன்னில் வயிரம் முதலிய மணிகளை இழைக்கும் வயிரத் தட்டார்களும் இடைவிடாது தம் தொழிலை ஊக்கத்துடன் செய்துகொண்டிருக்கின்றனர். துணிகளை வெட்டி ஆடைகள் தைக்கின்றனர் துன்னற்காரர்கள். சக்கிலியர் தோலைப் பதப்படுத்துகின்றனர். இன்னும் கெட்டி முதலிய வற்றால் பலவித கண்கவரும் பொருள்களைச் செய்யும் தொழி லாளர்களும் இங்கு ஏராளமாய் வாழ்கின்றனர்.

"கஞ்சக் காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்"

[கஞ்சக்காரர்: வெண்கலக் கன்னார். கருங்கை; வலிமையான கையையுடைய. கண்ணுள் வினைஞர்: சித்திரக்காரர். மண்ணீட் டாளர்: மண்ணால் பதுமை முதலியன செய்வோர். நன்கலம் தருநர்: இரத்தினத் தட்டார். துன்னகாரர்: தையற்காரர். கிழி: துணி. கிடை: கெட்டி.]

எல்லாவற்றிற்கும் கடைசியாக உள்ள இடத்தில் இசைப் பாணர்கள் வாழ்கின்றார்கள். வாய்ப்பாட்டு வல்லவர்களும், முழவு, மத்தளம் முதலிய முழக்குகின்றவர்களும், குழல், யாழ் இவற்றில் தேர்ச்சிபெற்ற பெரும் பாணர்களும், வாழும் இடங்கள் மிகத் தூய்மையாகவும், கலைச்செல்வி அரசிருக்கும் கழகங்களாகவும் விளங்குகின்றன. கலைமகளும், திருமகளும் இங்கு களிநடம் புரியக் காணுகின்றோம். ஏழ் இசைகளும் இங்கு துள்ளி விளையாடுகின்றன.

"குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின்றி இசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறல் மரபில் பெரும்பாண் இருக்கையும்
சிறுகுறும் கைவினைப் பிறவினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்"

[குரல்முதல் ஏழு : குரல்முதலான ஏழு இசை. வழு இன்றி : குற்றம் இல்லாமல்- வழித்திறம் : பண்களின் வழியே தோன்றும் திறங்கள். பெரும்பாண்: பெரிய பாணர்கள். சிறுகுறுப் கைவினை : சிறிய கையால் செய்யப்படும் குடிசைத் தொழில்கள்.]

வானுற ஓங்கிய மாளிகைகளும், மதில்களும் சூழ்ந்த மருவூர்ப்பாக்கம் இத்துடன் முடிகின்றது.

காலமும் சேலையும்

புதியன புகுதலும் பழையன கழிதலும் சேலை நாகரீகத்தின் தினசரி இயல்பாம். இன்றைய நவீனம், நாளை பண்டைப் பழைமையாகிவிடுவது சேலைகளின் தனிச்சிறப்பு.

காலத்தின் போக்கில் எதிர்வருவனவற்றின் மீதே கருத்தமைத்து புதிய நெசவு, சாயமிடுதல் முறைகளைப் பயன்படுத்தி அன்றாட நாகரீகத்திற் கேற்ற உயர்தரமான சேலைகளை உங்களுக்களிப்பதே எங்கள் லட்சியம்.

மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
ஹாலோவேஸ் கார்டன்ஸ், 34, பாந்தியன் ரோட்,
எழும்பூர், மதராஸ்.

அவன் செய்த தீங்கு

எழிலன்

"நில்!"

கணீரென்ற ஒலி; எதிர்பாராத எதிர்ப்பு; கால்கள் மேலே செல்ல மறுக்கின்றன திடீரென்று தோன்றிய அதிர்ச்சியினால்.

ஆயினும் தன்னைத்தானோ என்ற ஓர் ஐயம்.

"தீங்கு செய்தோய்! நில்!"

"தீங்கு செய்தவர் யார்? நாமா? நம்மையறியாமலே ஏதேனும்.........? சே! அதெல்லாம் ஒன்றுமிருக்காது.

"ஈங்கு வந்து தீங்கு செய்தோய்! நில்!"

இவ்விடத்தில் வந்தா? நம்மைத் தவிர இவ்விடம் வருவோர் வேறு யாவர்? பழகிய குரலாகத்தான் தோன்றுகிறது. நெஞ்சமே அஞ்சாதே நீ.

"காதல் மயக்கத்தில் சாதலை மறந்து கார் இருட்கங்குலில் ஆரதர் கடந்து வந்த கள்வனே! காலடி எடுத்து வையேல்."

தயங்கி நின்றுவிட்டான் தலைவன், தாங்க முடியாத தடுமாற்றத்தினால். கால்கள் தடுமாறின. எதிர்பாராத ஏமாற்றம் வேறு எதிரில் தோன்றிய எழில் முகத்தைக் கண்டதும்.

சந்தர்ப்பத்தை விளக்கத்தான் வேண்டும் சற்றுத் தமிழ் விளங்காத தோழர்கட்கு.

அதோ ஒரு இன்பப் பூஞ்சோலை; அதன்கண் மலர்ந்துள்ள அழகிய மலர்கள்; அவற்றைத் தாங்க முடியாமல் தலை வணங்கும் தழைத் தோங்கிய மரங்கள், செடிகள். வான் ஓங்கிய வரைகளும் அவற்றின் புறந் தெரியாது போர்த்த சந்தன மரங்களும் ஓர் பால் கந்தம கமழக் காட்சி தருகின்றன. துளிர்களையும், மலர்களையும் தடவி, தீஞ்சுனைகளின் நீரைத் தெளிவு படுத்தி, உலவி வரும் தென்றல், எங்கும் தேனைச் சிதறுகின்ற மங்கலான மாலை நேரம்; அறிவை மயக்குகின்ற அந்தி நேரத்தில் ஆனந்தமாகப் பாடும் பறவையினங்கள்; அலரவன் குடகடலில் ஆழ்கின்றான். எங்கு நோக்கினும் இயற்கையின் காட்சிகள் பொன் மெருகு பூசப்பட்டுப் புது ஒளியுடன் பொலிகின்றன. புலவர்கள் பாடிய புன்மாலைதானோ இது! பலருக்கு நன்மாலையாகவும் இருக்கலாம்.

எது எவ்வாறாயினும் நாம் காணுகின்ற மலர்ச்சோலையில் உலவும் மங்கைக்கும், மலரில் தேன் குடிக்க வட்டமிடும் வண்டு போன்ற அக்காளைக்கும் அது நல்ல நேரமாகத்தான் இருக்கவேண்டும்.

காட்டினிடையே கடும்பரி செலுத்தி விலங்குகளை வீழ்த்தி

வேட்டையாடிய அவ்வீரன், வாட்டமுற்று வழிதவறி வந்தவனும்.

புனலிடை மூழ்கிப், பொழிலிடை உலவி பூக்கொய்வதற்காகத் தோழிகளைப் பிரிந்து தனியே வந்தவளாம் அவள். தன்னந்தனியே சந்தித்தனராம் இருவரும். இவ்வித சந்திப்பில் புக எவருக்கும் உரிமையில்லாத காலம் அது. ஆம்! காதல் இன்பம் நுகர்ந்து கலப்பு வாழ்க்கை நடத்திய தமிழரின் கடைச்சங்ககாலமும் அதுதான்.

கண்ணும் கண்ணும் கலந்தன. உளம் ஒன்றுபட்டால் உடல் களைப்பற்றுக் கூறுவானேன். சாதலும் வாழ்தலும் அற்ற, அணுச் சஞ்சலமேனும் அணுகாத, போதலும் மேவலும் ஒழிந்த, உளம் மொய்த்தலும் நீங்கலும் இல்லாத காதல் உணர்வென்னும் உலகத்தில், காணல் நினைத்தல் மறந்திருந்த காதலர்கள் சின்னேரத்தில் பிரிந்தனர், மனம் மறுத்த போதிலும்.

நாள் தவறாமல் நடந்துவந்த இக்காதல நாடகம் தோழிக்கும் அறிவிக்கப்பட்டது, துணை புரிவதற்காக. எனவே குறிப்பிட்ட வெளியிடங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் வீட்டிலேயே நடக்கத் தொடங்கின. நடு இரவிற்குமேல் தலைவன் தனியாக வந்து சேருவான் குறிக்கப்பட்ட இடத்தில், கூறப்பட்ட நேரத்தில். எதிர் சென்றழைத்து இல்லத்தில் விடுப்பாள் தோழி. இன்பத்தேன் உண்ட வண்டு மலரிலேயே தங்குவதில்லை; இருப்பிடம் சென்றுவிடும் இரவிற்குள்.

இதுபோன்ற நடுஇரவு ஒன்றில் நடந்ததுதான் நாம் மேலே தீட்டியது.

“தீங்கு செய்தனையே, ஈங்கு வந்தோயே!”

இச்சொற்களில்தான் எவ்வளவு உணர்ச்சிகள். கடமை, இரக்கம், துணிவு மூன்றும் கலந்து வெளிப்படுவன வல்லவா இவை! உணர்ச்சிகளை வெளியிடச் சொற்களால் இயலாதெனக் கூறியவர் யார்?

‘நில்!’

“எதற்காக?”

“தீங்கு செய்துவிட்டாய்!”

“தீங்கா! யாருக்கு?”

“எங்களுக்குத்தான், உனக்குங்கூட”

“காரணம்?”

“காதல் மயக்கமும், கன்னியின் மயக்கமும் கலந்ததுதான்.”

“மயில்கள் முகிலைத் தேடுவதும், வண்டு மலரை நாடுவதும் மயக்கமா? காட்டில் எரிக்கும் நிலவை வீட்டிற்கு விருந்தாக்கி, எழில் நிறைந்த உள்ளத்தில் இன்பத்தைப் பரப்பச் செய்வது தீங்கா?

கூறப்பட்டவை குற்றமுடையன அல்லதான். இன்பந் துய்ப்பதும் இளமையின் இயற்கைதான். எனினும் நல்லோர்

குற்றமற்ற இன்பத்தைபன்றோ நாடுவர். பழியற்ற— தூய— பலரும் விரும்பும் இன்பமே அவர்கள் வேண்டுவது, எத்தன்மையான காதலால் இழுப்புண்ட காலத்திலும்.

"கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
பழிபொடுவரூஉம் இன்பம் வெஃகார்"

"நான் அடையும் இன்பம் பழியுடன் கூடியதா? குன்றக் குறவரின் காதன் மடமகள் குற்றமுடையவளா? பைந்தமிழ்ப் புலவர்களின் பாட்டின்பத்தை மறந்து வாழினும் வாழ்வேன்; பாவையின் தோள் மறத்தல் அரிது."

வான்தோயும் வெற்பனே! மாறுபடக் கருதினுய்; மதியினுல் ஆய்ந்து பார் மயக்கத்தை விடுத்து. நீ வருகின்ற காலமோ கட்புலன் மயங்கும் கார் இருள் யாமம். வழியோ கள்வரும் அஞ்சும் கடத்தற்கரிய காடு. அன்று, உனக்காக காத்திருந்த குறியிடத்தில் நிகழ்ந்ததைக் கூற விரும்புகின்றேன் கேள்;—கரிய இருட்டு; கால் வைக்க முடியாத முட்புதர்கள். நகரின் பக்கத்தில் உள்ள காடு; நடமாட்டம் இல்லாத நேரம். கொள்ளையடிப்போரின் கள்ள உள்ளம்போல் வெடித்திருந்த ஓர் குகையில் குட்டிகளை அப்போதுதான் ஈன்றது ஒரு பெண் புலி. ஈன்ற வருத்தத்தால் பசி எடுத்து விட்டது. இறை தேட வியலாமல் தாங்க முடியாத களைப்பால் தன்னை மறந்துகிடந்தது அது.

வெளியில் சென்று மீண்ட ஆண் புலி இதைக் கண்டது. எங்கிருந்துதான் இவ்வளவு உணர்வும் வலிவும் அதற்கு ஏற்பட்டதோ! ஒரே தாவில் தாவி வெளிச் சென்றது, எதிர்ப்பட்ட எந்த விலங்கையும் வீழ்த்தும் எண்ணத்துடன். விரைந்த புலியை எதிர்த்தது ஓர் மதயானை. மலைகளையும், மரங்களையும் குத்திச் சிதறவடித்த அதன் கொம்புகள் விலங்குகளின் இரத்தத்தால் சிவந்து காணப்பட்டன. வெறிகொண்ட வன்மை வாய்ந்த அம்மதயானையை ஒரே அறையில் வீழ்த்திவிட்டது அம்மறப் புலி. வெற்றிகொண்ட வீரரின் ஆர்ப்பொலி போன்று வீறிட்டு முழங்கிய அதன் ஒலி காடு முழுவதும் எதிரொலி எழுப்பிற்று.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் எச்சமயத்தும் இயற்கையாக நடக்கின்ற இருண்ட காட்டில் தன்னந்தனியாகத் தயங்கித் தயங்கி வரும் உனக்கு ஏதேனும் நிகழுமாயின் நின்பால் உடலையும் உயிரையும் அடகு வைத்துள்ள அருமைத் தலைவியின் கதி என்னுகுவது? தலைவிக்கு ஒன்று நேருமாயின் எனது உயிர்க்கும் பின்னர் அனைவர் உயிருக்குமன்றோ இன்னல்!

ஆதலால் தேன் தமிழ் நாடனே! செய்த தீங்கினைத் தெரிந்து திருத்திக்கொள்.

உரைகல்

வாழ்க்கையில் வெற்றி

ஆசிரியர்: அப்துற்-றஹீம் பி.ஏ.,

மக்களிடத்தில் நிறைந்துள்ள தோல்வி மனப்பான்மையும், தாழ்வு எண்ணங்களுமே, அவர்களை வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைக்காமல் செய்கின்றன. நம் நாட்டிலேயோ—மக்களின் உள்ளம் விதியின் சதிக்குள்ளாகி, எந்த ஒரு செயலிலும், பணியிலும் வெற்றி பெறுவோம் என்ற உறுதி யிழந்து கிடக்கின்றது.

இந்நிலையிலுள்ள மக்கள், தன்னம்பிக்கை கொண்டாலொழிய, தன்னுணர்வும், தைரியமும் பெற்றாலொழிய எந்நாளும், எதன் கண்ணும் வெற்றிகாண வியலாது என்பதை, உலகின் பற்பல நாடுகளிலும், காலங்களிலும் தோன்றிப் பலப்பல துறைகளிலும் ஈடுபட்டுப் பிறர் கண்டறியாத பெருவெற்றிகளைப் பெற்றுள்ளவர்களின் ஆழ்ந்த கருத்துரைகளைக் கொண்டும் அவர்களின் அரும்பெரும் செயல்களைக் கொண்டும் எடுத்துக் காட்டியுள்ளதோடு, மக்கள் மனம் பொதுப்பணியில், நாட்டுக்கான நற்றொண்டில், சமூக சேவையில் ஈடுபடும் அளவிற்கு, உயர்ந்த குறிக்கோளோடு வாழ்வதன் அவசியத்தையும் விளக்கியுள்ளார், இதன் ஆசிரியர்.

"சிந்திய அறிவைச் செம்மைப்படுத்திய செல்வியே! நன்றி! செப்பத் தக்கது இன்னதெனத் தெரிவி; விரைவில் முயலுகின்றேன்."

தெரிவிப்பதென்ன! இவ்வாறே நாட்கள் களவு முறையிலேயே கடக்குமானால், இருண்ட வழியிலே இரவில் வந்து வந்து நீயும் மீளுவாயானால், ஊரார் பழிச் சொல்லால் உள்ளம் ஒடுங்கிக் கவலையில் ஆழ்ந்துள்ள தலைமகளின் கதி என்னாவது?

தோளிடை முயக்கத்தால் நீயும் தொல்லைக்குள்ளாவாய். எனவே சொல் முறைப்படி, ஆன்றோர் முன்னிலையில் அணங்கை மணந்துகொள்வதே அடுத்துச் செயற்பாலதாம்.

"மதிவல்ல பாங்கியே! வாழ்க நின் முயற்சி. வருகின்றேன். வருகின்றேன் விரைவில் மணமங்கலத்துடன்."

தோழியுடன் தலைவன் பதில் நேர்ந்தால் உரையாடல் மேற்கண்டவாறுதான் நடந்திருக்கும். ஆனால் இம்முறையில் அன்றி ஒருவர் வாய்ச்சொல்லாகவே இக்கருத்துக்களை அமைத்துப் பாடுதலே மரபெனக்கொண்டு புலவர்கள் பாடியுள்ளனர்.

ஒரு பண்டைத் தமிழ்க் குடும்பத்தில் நிகழ்ந்ததாக இச்செய்தியை அகநானூற்றுப் பாடல் ஒன்று* அழகுற நமக்குக் கூறுகின்றது.

* அகம். செய்யுள் 112.

மக்களுக்கிடையிலேதான், மாவீரர்கள், மாபெருந் தலைவர்கள், பெரும் பேரறிஞர்கள், ஒப்பற்ற தியாகிகள், குணக் குன்றுகள் தோன்றுகிறார்கள் என்பதையும் அவர்கள் புகழ்பெற்று ஒளிர்வதற்கான காரணத்தையும், இளைஞர்கள் கண்டறிந்து தாமும் அவ் வெற்றிப் பாதையில் நடக்க முற்பட இந் நூல் பெரிதும் துணையாகும்.

'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' என்ற வேதாந்தத்தை எண்ணி, வீண் பொழுது போக்காமல், வாழ்க்கையே பயனுள்ளதாகச் செய்ய "வாழ்க்கையில் வெற்றி" காண இவ்வாசிரியர் கொண்ட முயற்சி, பாராட்டத்தக்கதாகும். அறிஞர்களின் கருத்துக்கள் விரவ, எளிய நடையில் அமைந்துள்ள இந்நூலை, இளைஞர் ஒவ்வொருவரும் படித்துப் பயன் பெற விழைகிறோம்.

பக்கம் 172 விலை ரூ 2½

கிடைக்குமிடம் :— யுனிவர்சல் பப்ளிஷர்ஸ், 155/156 தங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

நரகாசுரப் படுகொலை

ஆசிரியர் : அருப்புக்கோட்டை

எம். எஸ். இராமசாமி

'தீபாவளி'ப் பண்டிகையை நம் மக்கள் கொண்டாடுவதற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்ற ஆரிய புராணக் கதையின் புரட்டுக்களையும், பொருத்தமற்ற கருத்துக்களையும் விளக்கியுள்ளதோடு, அந்தக் கற்பனைக் கதையிலேயும் எப்படி ஆரியரின் வாழ்வும், திராவிடரின் அழிவும் பெறப்படுகின்றது என்பதையும் திராவிடர்கள் 'தீபாவளி' கொண்டாடுவதன், பொருத்தமற்ற தன்மையையும், இழிவையும், மடமையையும் எடுத்துக்காட்டியுள்ளார் இதன் ஆசிரியர். இக்காலத்திலும், 'தீபாவளி' மனப்பான்மை கொண்டவர்கள் அவசியம் இந் நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும். பக்கம் 60. விலை அணா 12.

கிடைக்குமிடம் :

சிவசண்முகசுந்தரன்

புளியம்பட்டி, அருப்புக்கோட்டை.

"காலம்"

(மாத மிருமுறை)

ஆசிரியர் : R. சிவஞானம்

காலத்திற்கேற்ற முறையில், தமிழிலே இதுவரை வெளிவராத புதுவகையில், பலப்பல சித்திரப் படங்களுடனும், வெளியுலகச் செய்திகளுடனும் விளக்கக் கட்டுரைகளுடனும், அரசியல் தலைவர்களின் கருத்துரைகளுடனும், புதுக் கதைகளுடனும் 'காலம்' தோன்றியுள்ளது.

தமிழ்க்கலை வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் பொது அறிவு வளர்ச்சிக்கும் "காலம்" துணையாகும். முதல் இதழில் நேர்ந்துள்ள சில பல தமிழ்ப் பிழைகளும் நேராது காத்துத் தமிழ்மொழிக்கும் ஆக்கந் தேடவேண்டுமென விழைவதோடு, காலத்திற்கேற்ற விருந்தாகத் திகழும் 'காலத்தை' வரவேற்கிறோம். விலை அணா 3.

வெளியிடுவோர் :

"காலம்" நிலையம்

21, சைடனாம்ஸ் ரோடு,

பெரியமெட், சென்னை—3.

புதுவாழ்வு

(மாத வெளியீடு)

விலை விவரம்:—	உள் நாடு (இந்தியா, இலங்கை)	வெளி நாடு (பர்மா, மலேயா முதலிய இடங்கள்)
தனி இதழ்	அணா 4	அணா 5
ஆண்டுக் கட்டணம்	ரூ. 3	ரூ. 4

(ஓர் ஆண்டுக்குக் குறைவாகச் சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

விளம்பர விகிதம்:—

அட்டை வெளிப்பக்கம்	ரூ.	120
,, உள்பக்கம்	,,	80
உள் பகுதி முழுப்பக்கம்	,,	60
,, அரைப்பக்கம்	,,	30
,, கால்பக்கம்	,,	20

தொடர்ந்து விளம்பரம் செய்ய விரும்புவோர் விவரங்கட்கு எழுதுக.

ஈரோடு, பட்டுக்கோட்டை, மன்னார்குடி, விருத்தாசலம், விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, அரக்கோணம், செங்கல்பட்டு, குளித்தலை, பழநி முதலிய ஊர்கட்கு, முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

மற்ற விவரங்கட்கு:— நிர்வாகி,

புதுவாழ்வு

10, வேளாளர் தெரு,

புரசைபாக்கம் :: சென்னை—7.

Edited and Published by K. Anbazhagan M.A., at 10, Vellala St., Madras-7. Printed by S. Kalappan at Oriental Printing Works, 5, Sunkurama Chetty St., Madras-1.